ஸ்ரீ காமகோடி க்ரந்தாவளி — 12

ஸ்ரீ ஆனந்த ஸாகரஸ்தவம்

ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழ் ஆங்கில அனுவாதமும்



ஸ்ரீ மீனாக்ஷி

ஸ்ரீ:

மஹாகவி ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் அவர்கள்

இயற்றிய

ஸ்ரீ ஆனந்தஸாகரஸ்தவம்

ஸ்ரீ ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம்.ஏ., பி.எல்.

எழுதிய முகவுரை, தமிழ், ஆங்கில அனுவாதங்களுடனும்

மதுரை, ஹைகோர்ட்டு வக்கீல், தர்மபூஷண, த்ர்ம ஸம்வர்த்தக

ராவ் ஸாஹேப் N. நடேச அய்யர் அவர்கள்

எழுதிய ஆங்கில முன்னுரையுடனும்

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான

ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

அருளிய திவ்விய ஸ்ரீமுகத்துடனும்

கூடியது

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

57, மேல டபீர் வீதி :: கும்பகோணம்

 மே 1944 [விலை அணா 12

श्रीकामकोटिग्रन्थावलिः १२

श्रीः

श्रीचन्द्रमौलीश्वराय नमः

श्रीमन्नीलकण्ठदीक्षितवर्यैः प्रणीतः

॥ श्री आनन्दसागरस्तवः ॥

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्य श्रीकामकोटिपीठाधीश्वर
जगद्गुरु श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादानां
श्रीमुखेन समुद्भासितः



श्रीकामकोटिर्विजयते

श्रीकामकोटि कोशस्थानेन प्रकाशितः
५७, मेल डबीर वीथी, कुम्भघोणम्

 1944 [मूल्यम् द्वादशाणकाः

श्रीः

॥ श्रीमुखम् ॥

मुद्रा

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य श्रीमच्छङ्करभगवत्पादप्रतिष्ठित-
श्रीकाञ्ची कामकोटिपीठाधीश्वर श्रीजगद्गुरु श्रीमच्चन्द्रशेखरेन्द्र-
सरस्वती श्रीपादैः क्रियते नारायणस्मृतिः ॥

अस्ति निखिलसहृदयविपश्चित्कुलशेखराणां श्रीपरदेवताप्रपदनपरानुरक्तिभूषणानां महाकवि श्रीनीलकण्ठदीक्षितेन्द्राणां कृतिः— **आनन्दसागरस्तवो** नाम । सेयं सर्वसुगमभाषानुवादसहिता श्रीकामकोटिकोशस्थानेन सांप्रतं प्रकाशमुपनीयत इति विजानतां स्वान्तमानन्दसागरे निमज्जत्येव ॥

विश्वतोगतिषु दीक्षितेन्द्राणां कृतिषु इयमन्यादृशी गतिरानन्दसागरस्तवस्य, यत्र विश्वत्रसात्रसविलक्षणरूपया (अखिलचराचरप्राणभृदसुलभरूपया) विस्रम्भसंपदा चराचरजनन्यै श्रीमीनाक्षीदेव्यै स्वात्मा निवेद्यते । पूर्वोत्तरभागद्वयसंभिन्नमिव च स्वं स्वरूपमावहदिदं काव्यरत्नं स्वप्रतिपाद्यमद्भुतद्वन्द्वात्मकं किमपि तत्त्वं स्वरूपेणाप्यनुकरोतीव । तथा हि; अयं प्रबन्धः द्विपञ्चाशत्पद्यपरिमितेन पूर्वेण भागेन "प्रारब्धकर्म कियदारभते (२०), आत्मा समस्त-

जगताम् (२३) वेदान्तवाक्यजनितम् (७)" इति चैवमादिवचनैः कर्म-भक्ति-ज्ञानमार्गाणामनपेक्ष्यतां प्रपत्तेरेव परमादरणीयतां चोपवर्णयति। प्रपत्तेः फलं जीवन्मुक्तिसुखास्वादलक्षणं तूत्तरेण भागेनेति विषयविभागः समुन्नेतव्यः ॥

सर्वशास्त्रपरमैदंपर्यपर्यवसानभूतं परदेवतात्मकपरतत्त्वं तदवगमार्थांश्च नैकविधान् शास्त्रार्थान् सरलया गमनिकया सहृदयसंवादं सरसतामापाद्यापरोक्षमिव कलयत् मन्यामहे काव्यमेतत्पर्याप्तमेव सहृदयलोकस्य विशिष्टतत्त्वोपदेशाय ॥

इदं तावत्पाठकसहृदयैरवश्यमवधातव्यम्—यथा महाकवयः प्रायेण स्वंस्वमर्थं संदिशन्तः 'अपशवो वा अन्ये गो अश्वेभ्यः' इतिवत् नहि निन्दान्यायेन वा, 'कस्त्वं वानर रामराजभवने' इतिवत् व्याजस्तुतिचमत्कारेण वाऽर्थान्तरं विनिन्दन्त इव संदिशन्ति। विशेषतश्चैषा शैली श्रीदीक्षितेन्द्राणां कृतिषु संलक्ष्यत इति। तदिह कर्म-भक्ति-ज्ञानमार्गदूषणप्रतिभानेषु यथादर्शितेषु पाठकैः सहृदयतापरकाष्ठामधिरूढैर्भूत्वा कविभावपरमार्थगतिरनुसरणीया, न केवलवाच्यार्थनिर्बद्धैर्मार्गान्तरदूषणेऽभिनिविष्टमानसैर्भवितव्यम्। तथा च परावृत्य सूक्ष्मया विपश्चिद्दृष्ट्या विवेके क्रियमाणे, कविवरैः स्वोद्भावितानामेव दूषणानां तत्रतत्र परिहारोऽपि गूढतया निवेशितो दरीदृश्यते। सर्वथाऽपि निबन्धोऽयं मार्गविशेषप्रत्याख्यानाय प्रवृत्त इति नेदं नेदीयः काव्यपरिशीलिनाम् ॥

जीवन्मुक्तिदशां प्राप्य कदाचिन्निर्विकल्पकसमाधेर्व्युत्थितानां दीक्षितेन्द्राणां "सुखमात्यन्तिकं यत्तद्बुद्धिग्राह्यमतीन्द्रियम्।

वेत्ति ” इति नीत्या तत्कालसमास्वादितानन्दसागरतरङ्गपरम्पराया विवर्तरूपोऽयं स्तवराज इत्यभियुक्तसंप्रदायः । अत एव,

“ आचूडमाचरणमम्ब तवानुवार-
मन्तस्स्मरन् भुवनमङ्गलमङ्गमङ्गम् ।
आनन्दसागरतरङ्गपरम्पराभि-
रान्दोलितो न गणयामि गतान्यहानि ॥” [५३]

इत्युत्तरभागोपक्रम एव **आनन्दसागरस्तव** इत्यन्वर्थमस्य नामेति सूचयन्ति कविवर्याः । तथा—

“ नास्मिन् रविस्तपति नात्र विवाति वातो
नास्य प्रवृत्तिमपि वेद जगत्समस्तम् ।
अन्तःपुरं तदिदमीदृशमन्तकारेः
अस्मादृशास्तु सुखमत्र चरन्ति बालाः ॥” [१०३]

इत्यनेन निर्वृत्तमात्मनः परमात्मसाक्षात्कारं सूचयन्तीति गम्यते ।

इत्थं नाम परदेवतासाक्षात्कारपरिनिष्पन्नाखण्डानन्दसागरतरङ्ग-परिस्पन्दरूपोऽयं स्तवराजः शृण्वतां मन्वानानामनुध्यायतां च सर्वेषामपि आनन्दसाक्षात्काराविधिकं फलमेकान्ततः श्रीचन्द्रमौलीश-कृपया भावयत्वित्याशास्महे ॥

विजययात्रास्थानम्
कुम्भरमिटा तारण सं०
वैशाखामावास्या भानुवासरः
21-5-44.

नारायणस्मृतिः

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமுகம் ॥

(முத்ரை)

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜக ஆசார்யவர்யர்களான ஸ்ரீமத் சங்கரபகவத்பாதர்களினுல் ப்ரதிஷ்டை செய்யப் பெற்ற ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதீச்வரர்களான ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமத் சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ பாதர்களால் நாராயண ஸ்மரணம் செய்யப்படுகிறது.

ஸஹ்ருதயர்களான ஸகல பண்டிதர்களின் கூட்டத்திற்கும் சிரோபூஷணமாய் விளங்குபவரும் ஸ்ரீ பரதேவதையைச் சரணம் புகுவதிலுள்ள உயர்ந்த விருப்பத்தையே அணியாகக் கொண்டவருமாகிய மஹாகவி ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரவர்களின் க்ரந்தங்களில் ஒன்ருக விளங்குவது ஆனந்தஸாகரஸ்தவம். அது எவர்க்கும் எளிதான பாஷைகளில் (தமிழிலும் இங்கிலீஷிலும்) அனுவாதத்தோடுகூடி அச்சிடப்பெற்று ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தின் வெளியீடுகளில் ஒன்ருக வெளி வருகிறதென்பதை அறியுமவர்களுள்ளம் ஆநந்தவெள்ளத்தில் மூழ்குகின்றது.

எல்லாவிதப் போக்குகளேயுமுடைய தீக்ஷிதரவர்களின் க்ரந்தங்களுக்குள் இந்த ஆநந்தஸாகரஸ்தவத்தின் போக்கு தனிச் சிறப்பு வாய்ந்தது. இதில் கவி, உலகத்திலுள்ள ஸ்தாவர ஜங்கமங்களுக்குக் கிடைக்கவரிதான நம்பிக்கைச் செல்வத்தினுல் எல்லா உலகுக்கும் தாயாகிய ஸ்ரீ மீனுக்ஷி தேவிக்குத் தம்மை (ஆத்ம) அர்ப்பணம் செய்கின்ருர். இரண்டு பாகங்களாகப் பகுக்கப்பட்டிருக்கும் தன்மை வாய்ந்த இச்சிறந்த காவியம், இதில் வர்ணிக்கப்படும் அற்புதமான இரட்டைரூபமுள்ள (அர்த்தநாரீஸ்வராத்மகமான) தத்வத்தை ரூபத்தினுலும் ஒத்திருப்பதுபோலாம். அப்படியே இக்கிரந்தம் ஐம்பத்திரண்டு ச்லோகம் (1-52)

கொண்ட முதல் பாகத்தினுல், கர்ம-பக்தி-ஜ்ஞாநம் என்ற வழிகள் தேவையில்லை என்பதையும், ப்ரபத்தியே நன்கு கைப்பற்றத் தகுந்தது என்பதையும், “ப்ராரவீயகர்ம கியஷாரஹதே, ஆத்மா ஸ்மஸ்தஜமுதாம், வேஷாந்தவாக்யஜநிதம்” (20,23,7) இது முதலிய வசனங்களால் கூறுகிறது. ஜீவன்முக்தி ஸுகாநுபவரூபமான ப்ரபத்திபலம் இரண்டாவது பாகத்தினுல் வெளிப்படுகிறது என்ற விஷயவிபாகம் கவனிக்கத்தக்கது.

ஸகல ஶாஸ்திரங்களுக்கும் கடைப்பிடியானதும் பரதேவதாஸ்வரூபமுமான பரதத்வத்தையும் அதையறிவதற்குரித்தான அனேக சாஸ்த்ரார்த்தங்களேயும் எளியநடையில், ஸஹ்ருதயர்களுக்கு உண்மையென்பதையும் களிப்புறுவதையும் உண்டுபண்ணி ப்ரத்யக்ஷமாகக் காண்பிக்கும் இக்காவ்யம் உயர்ந்த தத்வத்தை ரஸிககோஷ்டிக்கு உபதேசிப்பதில் திறமை வாய்ந்ததென்றே உறுதி கொள்ளுகிருேம்.

இதைப் படிக்குமவர்கள் அவசியம் கவனிக்கவேண்டியதாவது:—“ மஹாகவிகள் (தங்கள் கிரந்தங்களில்) விஷயத்தை எடுத்துரைக்கும்போது ‘அபஶவோ வா அன்யேமோ அஶ்வேஹூயஃ’ என்பதுபோன்ற நஹி நிந்தாந்யாயத்திலோ ‘கஸ்த்வம் வானர ராமராஜ ஹவனே’ என்பது போன்ற வ்யாஜஸ்துதி சமத்காரத்தினுலோ வேறுபொருளை இகழ்ந்ததுபோலவே பெரும்பாலும் பேசுவார்கள். இந்த ப்ரகாரம் சொல்லும் பழக்கம் தீக்ஷித ச்ரேஷ்டரின் கிரந்தங்களில் அதிகமாகக் காணப்படும்” என்பது. ஆகவே, ‘கர்ம-பக்தி-ஞான மார்க்கங்களை எடுத்துக் கழிக்கும் பாகத்தை வாசிக்குமவர்கள் ஸஹ்ருதயத் தன்மை மேலிட்டவர்களாகி அப்படி காட்டுமிடங்களில் கவியின் உண்மையான மனப்போக்கையே கவனிக்கவேண்டுமே யொழிய வேறு வழிகள் சரியல்ல என்று மேலெழும் பொருள்களில் மனதைச்செலுத்தலாகாது. ஸூக்ஷ்மமாகத் தங்கள் ஞானக் கண்ணைத்திருப்பி உபயோகித்துப் பகுத்துப் பார்க்குமளவில் தாம் எடுத்துக்காட்டிய தூஷணங்களுக்கு ஆங்காங்கு கவியேசொல்லியிருக்கும் பரிஹாரமும் நுண்ணியதாயிருக்குமழகு நன்கு விளங்கும். எனவே எவ்வகையிலும் (ப்ரபத்தியி

னும்) வேறு வழிகளைத் தாக்கிப்பேசுவதற்கே இக்கிரந்தம் ஏற்பட்டதென்று காவ்யப் பயிற்சி உள்ளவர்களுக்குத் தோன்றுது.

ஜீவன் முக்திதசையை அடைந்து ஒருஸமயம் நிர்விகல்ப ஸமாதியிலிருந்து வெளிப்பட்ட தீக்ஷிதர்களுக்கு "ஸுக மாத்யந்திகம் யத்தத்புத்திக்ராஹ்ய மதீந்த்ரியம்,வேத்தி" என்கிற ந்யாயப்படி அவ்வமயம் அநுபவிக்கப்பெற்ற ஆனந்தமாகிற கடலிலுள்ள அலைவரிசைகளின் உருவமே இத்தோத்திரம் என்பது பெரியோர்களின் கொள்கை. ஆகையினுலேயே,

> "ஆரூடமாசரணமம்ப தவாநுவர்ரம்
> அந்தஸ்ஸ்மரந் ஸுகமஞ்ஜலமஞ்ஜமஞ்ஜும் |
> ஆநந்தஸாகர தரங்கபரம்பராபி:
> ஆந்தோலிதோ ந கணயாமி கதாந்யஹாநி" ‖ 53 ‖

என்று இரண்டாவது பாகத்தின் தொடக்கத்திலேயே இக் காவியத்துக்கு ஆநந்தஸாகரஸ்தவம் என்னும் பெயர் தகுந் தது என்று கவியே ஸூசனை செய்திருக்கிறுர். அப்படியே,

> "நாஸ்மிந் ரவிஸ்தபதி நாத்ர விவாதி வாத:
> நாஸ்ய ப்ரவ்ருத்திமபி வேத ஜகத் ஸமஸ்தம் |
> அந்த:புரம் தஇதமீத்ருஶ மந்தகாரே:
> அஸ்மாத்ருஶாஸ்து ஸுகமத்ர சரந்தி பாலா:" ‖ 103 ‖

என்னும் ச்லோகத்தினுல் தனக்கு பரமாத்ம ஸாக்ஷாத்காரம் நேர்ந்தது என்று கவியறிவிக்கிருரென்பதும் புலப்படுகிறது.

இவ்வாறு பரதேவதையின் ஸாக்ஷாத்காரத்தினுல் பரி பூர்ணமாக உண்டான ஆநந்தக்கடலின் அலைத்திரள் வடிவு எனப்படும் இந்த ஸ்தோத்ரமானது, படனம், மனனம், த்யானம்,செய்யுமவர்கள் யாவர்க்கும் ஆனந்த ஸாக்ஷாத்கார மிறுதியான பலன் ஸ்ரீ சந்த்ரமௌளீஶ்வரரருளால் அவ சியம் பயக்குமாறு ஆசீர்வதிக்கின்றோம்.

விஜய யாத்ராஸ்தானம்
கும்மரமிட கிராமம்
தாரண௵ வைகாசிமீ
அமாவாசை, ஞாயிறு, 21.5-44

நாராயண ஸ்ம்ருதி:

WITH THE INTRODUCTION

BY

Dharmabhushana Rao Sahib

N. NATESA AYYAR, B.A., B.L., Madura.

ब्रह्मेति शक्तिरिति बन्धविमोचनीति
मायामयीति मदनान्तकवल्लभेति ।
सप्ताष्टशब्दपरिवर्तनमात्र एव
सामर्थ्यमावहति शास्त्रपरिश्रमोऽयम् ॥ ११ ॥

कर्म त्यजेम यदि नूनमधः पतेम
यद्याचरेम न कदाऽपि भवं तरेम ।
कर्म त्यजेदिति चरेदिति च प्रवृत्ता
भावेन केन निगमा इति न प्रतीमः ॥ १८ ॥

आक्रान्तमन्तररिभिर्मदमत्सराद्यैः
गात्रं पलीपलितरोगशतानुविद्धम् ।
दारैस्सुतैश्च गृहमावृतमुत्तमर्णैः
मातः कथं भवतु मे मनसः प्रसादः ॥ २८ ॥

का संसृतिः किमपचारनिबन्धनेयं
कीदृग्विधस्य तव किं क्षतमेतयेति ।
प्रश्ने तु नास्मि कुशलः प्रतिवक्तुमेव
खेदस्तु मे जननि कोऽप्ययमेवमास्ते ॥ ३० ॥

क्वेद पतिष्यति वपुः क्व ततो नु गम्यं
को दण्डयिष्यति कियन्तमनेहसं वा ।
किं तस्य संतरणसाधनमित्यनन्ता
चिन्ता स्थिता त्वयि शनैरवतारिता सा ॥ ४६ ।

काश्यां निपातय वपुः श्वपचालये वा
स्वर्गं नय त्वमपवर्गमधोगतिं वा ।
अद्यैव वा कुरु दयां पुनरायतौ वा
कः संभ्रमो मम धने धनिनः प्रमाणम् ॥ ५१ ॥

आचूडमाचरणमम्ब तवानुवार-
मन्तः स्मरन्भुवनमङ्गलमङ्गमङ्गम् ।
आनन्दसागरतरङ्गपरम्पराभि-
रान्दोलितो न गणयामि गतान्यहानि ॥ ५३ ॥

अर्धं जितत्रिपुरमम्ब तव स्मितं चे-
दर्धान्तरेण च तथा भवितव्यमेव ।
तच्चिन्तये जननि कारणसूक्ष्मरूप-
स्थूलात्मकत्रिपुरशान्तिकृते स्मितं ते ॥ ८० ॥

विश्वं सृजत्यवति हन्ति च यत्कटाक्षो
विश्वस्यतां कथमसौ चपलस्वभावः ।
एषोऽपि यामनुसरँल्लभते यशांसि
तामेव विश्वसिमि देवि तवानुकम्पाम् ॥ ९२ ॥

अर्धं कलङ्करहिता करुणैव शम्भो-
रर्धं गुणास्तदितरे सकलाः समेताः ।
इत्यम्ब संप्रति किल स्फुरितं रहस्यं
संपश्यतो मम भवन्मयमैशमर्धम् ॥ ९३ ॥

अर्धं स्त्रियस्त्रिभुवने सचराचरेऽस्मि-
न्नर्धं पुमांस इति दर्शयितुं भवत्या ।
स्त्रीपुंसलक्षणमिदं वपुरादृतं य-
त्तेनासि देवि विदिता त्रिजगच्छरीरा ॥ १०० ॥

निर्मासि संहरसि निर्वहसि त्रिलोकीं
वृत्तान्तमेतमपि वेत्ति न वा महेशः ।
तस्येश्वरस्य गिरिजे तव साहचर्या-
ज्ञातः श्रुतिष्वपि जगज्जनकत्ववादः ॥ १०१ ॥

आनन्दसागरस्तवे 11, 18, 28, 30, 46, 51, 53, 80, 92, 93, 100, 101.

I. NILAKANTHA DIKSHITA, known also as சின்ன தீக்ஷிதர், belongs to the seventeenth century as stated by himself in his Nilakantha Vijaya Champu, a verse wherein assigns to the Champu the Kali Year 4738 corresponding to A. D. 1637 as the date of its composition. Three kingdoms, the Pallava Nad (Chingleput and North Arcot), the Pandya Nad (Madura and Chera) and Tinnevelly vie with one another in each claiming him as its own—the first as the son of its soil in Adayappalam near Virinchipuram, Kanchi; the second as the chosen Prime Minister of its king Tirumalai Naicker; the third as the resident of its village பாலாமடை (Palamadai) in his closing years. Three Muses, the Muse of Kavya Sastra (Poetry), the Muse of Tatva Sastra (Philosophy), the Muse of Bhakti Sastra (Divine fervour), have been profusely favouring his family for 5 generations above and below, while a fourth Muse of Artha Sastra (Statesmanship) has been particularly honouring him in addition. The वंशवृक्ष (geneological tree) gives full particulars of his lineage. That he has won for himself the highest place of honour among the poets, philosophers and statesmen of his age will be easily seen from contemporary writings.

- Rangaraja Dikshitar
  - Appayya Dikshitar
  - Achan Dikshitar
    - Narayana Dikshitar — Bhumi Devi
      - Achan
      - Nilakantha
      - Chinnappayya
      - Chandrakalavatamsa
      - Atiratra Yajva
        - A
        - B
        - Girvanendra गीर्वाणेन्द्र
        - author of Sringarathilaka Bhana शृङ्गारतिलकभाण
        - C

II. Tradition, supported, in a way, by the internal evidence furnished by the works of Nilakantha, has woven three charming legends about his life-history, about his Pitt-like entry into the Pandya Nad, as the Prime Minister of Tirumalai Naick, his brilliant career there like that of Manivachaka and his Wolsley-like exit into the village of Palamadai in his closing days. It will be useful to narrate them at the outset in the barest outline as they are not generally known and as they furnish the key to the correct understanding of most of his writings.

(*a*) *The 1st legend relates to his entry into Madura as its Prime Minister.*

In the course of a family partition and in answer to the question of Appayya, as to what he wanted as

his share in the Daya, the budding boy Nilakantha declared unhesitatingly that he valued Appayya's कृपा (Kṛpa) higher than even a Maharajya. With tears of pride and joy welling up in his eyes, that great Appayya gave him Raghuvamsa and Devi-Mahatmya in palm leaf manuscripts with 200 lines on each leaf and sent him to Madura with hearty blessings that a Maharajyam will soon voluntarily woo him. Patanjali in his Yoga Sutras solemnly assures सत्यप्रतिष्ठायां क्रियाफलाश्रयत्वं. Bhavabhuti in his Uttara Rama Charita declares with equal emphasis:

लौकिकानां हि साधूनामर्थं वागनुवर्तते ।
ऋषीणां पुनराद्यानां वाचमर्थोऽनुधावति ॥

The Vak of the truthful Appayya becomes true very soon. The daily discourses on Devi-Mahatmya, regularly delivered by Nilakantha while yet in his teens on the banks of the Svarna Padmini, in the ancient soul-stirring oriental style, now lamentably disappearing, before an ever-growing gathering of thousands and often listened to unobserved by Tirumalai Naick himself during his routine nocturnal visits, revealed to him the priceless treasures lying hidden within the tiny frame. He at once set his heart upon making the boy his Prime Minister. To stem the tide of discontent surging among his indigenous subjects against the introduction of an alien element—a feature not peculiar to modern times alone—he convened a Parishad in true oriental fashion and offered the premiership to whomsoever will answer the simple question,

How did काक come to be called काक ?

Vacant looks, violent heart-beats and shaking heads were the response. As the king was about to dissolve the Parishad in despair, up rose to his feet a slim and timid yet resolute form, from a remote corner wherein it had remained tucked up and gave *co-instanti* the required answer,

सीतेव राम इव क्षमया दयया भुवन इह का कः ?
इत्यात्मघोषवचसा तज्जातीयानां तथैव संज्ञाऽऽसीत् ॥

the substance of which is this :—

"When the All-merciful Sita Devi, unmindful of the outrage committed on her by Jayanta, the son of गौर (Indra), by pecking her bosom, interceded generously with the incensed but All-forgiving Ramachandra, Jayanta stood pardoned in consequence. The female crows and the male crows that had gathered sent up respectively joyous cries to the effect,

Which woman in this world (का) can equal Sita in क्षमा ?

Which man in this world (कः) can equal Rama in दया ?

The combination of the two letters का and कः thus pronounced by them gave rise to the appellation काक. Applauses greeted the figure from all sides and he was installed as Prime Minister. Need it be said that the figure was none else than Nilakantha ?

(*b*) The 2nd legend demonstrates that amidst the pleasures and splendours of a life in the dazzling

Royal Court, Nilakantha was living the austere serene and simple life of a Recluse. One fine morning, at the behest of Tirumalai Naick, the usual palanquin appeared in front of the house of Nilakantha, earlier than the appointed hour, for taking him to the Durbar Hall. His 18-year-old daughter was just then on a visit to her parents' house with her 25-year-old husband, after her marriage with him in her 8th year, 10 years before. In answer to a question of the palanquin-bearers, she stated blandly that her father was in the house of a chuckler, while really he was at his worship in his house at the Pooja Dalam. The fact was that Nilakantha had sent his worn-out sandals to the chuckler for mending and all the while he was enquiring within his mind, at the time of the pooja, why the chuckler had not brought them back. This episode further illustrates what uncanny powers a woman doing पतिसेवा sincerely, like the daughter of Nilakantha, can acquire. The girl was able to see what was passing in her father's mind and spoke the barest truth. The father's body alone was in the house. His mind was in the hut of the chuckler.

(c) This takes us to the 3rd legend. The *Ananda-sagarastava* has its roots in this episode. Between 1628 and 1635, the construction of the famous Pudu-mandapam was under way. Sundaramurti Asari, the palace sculptor, had carved out in a pillar of marble, exquisitely, the figure of Siva's एकपादमूर्ति with Brahma on one side and Vishnu on the other. The Vaishnavites objected to the installation. A huge controversy

raged for 6 months between the Saivites headed by Nilakantha and the Vaishnavites headed by an equally great Vaishnavite. It required the full play of all the talents and dialectics of Nilakantha to emerge successfully from the contest. Immediately after, another trouble arose. Sundaramurti Asari had easily won a name and fame for reaching perfection in his art even at the very first sitting. While chiselling the statue of the senior queen of Tirumalai Naick, intended to be placed in the Pudu Mandapam, he experienced the saddest tragedy of his life. A thin slice flew away from the right thigh of the statue, leaving that part defective. He sat at it a second time but with the same result. Perplexed and perturbed beyond measure, he explained the situation to Nilakantha, who happened to be there then, superintending the operations. As the result of a short and steady introspection, Nilakantha advised the sculptor to leave the statue as it was. The sculptor, when demanded by the king the next day, recounted all that had happened between him and Nilakantha. Devoured by jealousy, the green-eyed monster, and with the knowledge he had of the existence of a mole in the thigh of his queen, the king suspected, Bhoja-like, some questionable relationship between her and Nilakantha. He lashed himself into a paroxysm of anger and fury and ordered the arrest of Nilakantha, determined to scotch out his eyes and fill them with camphor. Nilakantha was in the Pooja Dalam, when the military commandant arrived with a full battalion. Nilakantha instinctively scented the situation, with the grace of Sri Minakshi, and wholly

unabashed, applied the camphor to his eyes and they became blind forthwith. The Commandant was requested to convey to the king the news that his wishes had been duly carried out. With a conscience smitten for his own iniquity, and trembling from head to foot, the penitent king ran up to Nilakantha and prayed for pardon. Moved by the genuine remorse and contrition of the king, the blind Nilakantha entered into communion with Sri Minakshi. What follows ?

Out, flowed in full flood, like the Kanakadhara-stava of Sri Sankara, with सुरधुनीनीकाशवाग्वैभव, in torrential eloquence equal to the force of the Ganges, the *Anandasagarastava*, in 105 verses, from Nilakantha's heart, with a genuine prayer to Sri Minakshi for the restoration of his eyesight, more for giving relief to the remorse-bitten king than to himself. Such is the origin of *Anandasagarastava*. More about it in the sequel. Suffice it to say here that tearing himself from the Royal Court, Nilakantha, to the inconsolable grief of the king, made பாலாமடை (Palamadai) the home of his closing days, honoured down to his dissolution by his royal grants.

III. Many of the writings of Nilakantha, in common with those of his renowned sire Appayya, have become irrecoverably lost to us. The works now extant consist of three Mahakavyas, eight Laghu Kavyas, a Nataka and a commentary on कैयट, a Vyakarna Grantha.

IV. The Mahakavyas are Gangavatarana, Nilakantha Vijaya Champu and Siva Lilarnava.

Gangavatarana, as its name implies, deals with the victorious exploits of Bhagiratha, for bringing down to the Earth, from the celestial regions above, the holy Ganges, and also with the greatness of Paramesvara. The Second brings out similarly the अव्याजकरुणा of Sri Siva, implicit in his devouring the poison Halahala, which came out of the ocean of Milk, when churned by the Devas and the Asuras and in saving the world from immediate destruction, thus establishing that he is not a Samharakarta, as erroneously supposed, but a real protector of the world. The *Siva Lilarnava*, on which mainly rests his fame as a great poet, depicts the 64 lilas of Siva in charming ecstatic poetry, interspersed with brilliant flashes of hasya rasa (wit and humour). It is noteworthy that the poet, fed on कारुण्यामृत and imbued with a real poetic sense of justice, correctly points out that the vanquished Jainas themselves voluntarily ascended the scaffold, thus redeeming Tirugnana Sambanda, from the charge of cruelty levelled sgainst him, as a cruel victor in the philosophical duel between them.

V. The eight laghu Kavyas consist of Kalividambana, Sabharanjana Sataka, Sivotkarsha Manjari, Sivatatva Rahasya, Anyapadesa Sataka, Vairagya Sataka, Santi Vilasa and Anandasagarastava.

(*a*) *Kalividambana* and *Sabharanjana Sataka* are delightful effusions of a promising youthful courtier poet, luridly painting the several gradually deteriorating religious and economic conditions, of the people of his time, amidst biting and brilliant flashes of sparkling

wit and humour. To this day, almost every verse therein is on the lips of even a layman, as a household word.

(*b*) The *Sivotkarsha Manjari*, *Sivatatva Rahasya* and *Anyapadesa Sataka* are the ecstatic outpourings of a Jiva, immersed in Siva Bhakti and negotiating step by step, on his onward march, the thorny paths of karma and yearning for the acquision of Vairagya and Santi, so very essential for realizing the Ananda inherent in him, with the aid of Divine grace. They take equal rank with the Sivananda Lahari, and Soundarya Lahari of Sri Sankara and the Vairagya Sataka of Bhartruhari.

(*c*) The *Vairagya Sataka*, *Santi Vilasa* and *Anandasagarastava* are companion volumes reflecting, as in a mirror, the tribulations, doubts, perplexities and conflicts, which harass, torment, torture and agonise a Jiva, treading the paths of Karma and Gnana, hankering after स्वात्मानन्दानुभव.

VI. I wish to sound, at this stage, a note of warning. The merits and beauties of Nilakantha's minor poems can be best percieved, appreciated, enjoyed and judged by those who make a thorough study of all of them in the original, in their chronological order and in the light of his chequered life-history. So approached, they take equal rank with the predecessors of Nilakantha, including even Sri Sankara, for felicity of expression, sublimity of ideas, depth of religious fervour and heights of poetical fancy. I say even "Sri Sankara" because it has to be said about his writings

whether Ashtakams or Laharis or Prakarana or Bhashyas, that being the productions of an Avatar of Isvara and Isana, the fountain head of all powers and all Vidyas, they are models of perfection, from start to finish, differing from the works of other poets, born or made, which like a sugar cane get progressively sweeter and sweeter, as they march on in life, from boyhood into youth, from youth into adoloscence and from adoloscence to old age. It is no wonder that many a critic, not in possession of the aforesaid key, has been led unwittingly into avoidable errors of judgment regarding the merits of some of Nilakantha's works. Can Kalidasa or Valmiki or Muka Kavi paint कैयट, पञ्चपादिका, परिमल, etc., in the hues of उषस् (dawn) राकाचन्द्र (full moon) and कमल (lotus) ?

VII. The very beautiful and accurate Tamil rendering of Brahmasri Mahalinga Sastrigal, a scion of the family of Nilakantha, followed, as it has been, by an intelligent, elaborate and scholarly exposition of the underlying ideas and Kavihridhaya, (कविहृदयं) has made it unnecessary to enter into a detailed analysis of the contents of *Anandasagarastava*. An introduction is hardly the place for such an analysis. I shall therefore content myself with the following summary.

VIII. The *Anandasagarastava*, as I read it, is the soliloquy of a Jiva, lacerated by a thousand conflicting emotions convulsing him, from head to foot, and struggling with wings undeveloped, soar into the dizzy heights of आनन्दानुभव after discarding the fickle, fleeting, evanescent, hollow and elusive pleasures of youth,

wealth, power, royal favour and every other earthly distinction. Every verse is a priceless gem, shining in matchless brilliance, too dazzling for an uninitiated and an untrained eye. The first 60 verses were composed, if tradition and internal evidence speak true, while he was still in the throes of the excruciating pain, caused by the burning and blinding camphor he had applied to them. The 3rd verse reminds one of the lamentations of Bhartruhari and Sri Sankara.

आक्रन्दितं रुदितमाहतमानने वा
कस्यार्द्रमस्तु हृदयं किमतः फलं वा ।
यस्या मनो द्रवति या जगतां स्वतन्त्रा
तस्यास्तवाम्ब पुरतः कथयामि खेदम् ॥

(आनन्दसागरस्तव: 3.)

कदा वाराणस्याममरतटिनीरोधसि वसन्
वसानः कौपीनं शिरसि निदधानोऽञ्जलिपुटम् ।
अये गौरीनाथ त्रिपुरहर शंभो त्रिणयन
प्रसीदेति क्रोशन् निमिषमिव नेष्यामि दिवसान् ॥

क्रीडार्थं सृजसि प्रपञ्चमखिलं क्रीडामृगास्ते जना
यत्कर्माचरितं मया च भवतः प्रीत्यै भवत्येव तत् ।
शंभो स्वस्य कुतूहलस्य करणं मच्चेष्टितं निश्चितं
तस्मान्मामकरक्षणं पशुपते कर्तव्यमेव त्वया ॥

(शिवानन्दलहरि 66.)

जनोऽयं संतप्तो जननि भवचण्डांशुकिरणै-
रलब्ध्वैकं शीतं कणमपि परज्ञानपयसः ।
तमोमार्गे पान्थस्तव झटिति कामाक्षि शिशिरां
पदाम्भोजच्छायां परमशिवजाये मृगयते ॥

(श्री मूकपञ्चशति पादा: 61.)

अहं पापी पापक्षपणनिपुणः शंकर भवान्
अहं भीतो भीताभयवितरणे ते व्यसनिता ।
अहं दीनो दीनोद्धरणविधिसज्ञस्त्वमितरन्
न जानेऽहं वक्तुं कुरु सकलशोच्ये मयि दयाम् ॥

(श्री दीनाक्रन्दनम् 49.)

What can be more thrilling than the unbounded child-like faith in the Devi, revealed in verses 3 to 6 and 12 ? What can be more disheartening than the description, in verses 7 to 11 and 15, of the perplexing, conflicting and unhinging theories characterising the Vedantic teachings (the gnana marga), difficult of understanding and realization, even after a series of endless births and deaths ? What can be more harrowing than the evanescence, impermanence and hollowness of the pleasures open to a Jiva, meticulously following the thorny path of Karma, which enjoys its performance and nonperformance in the same breath, depicted in verses 16 to 21 ? What can be more disquieting than the heart-rending exclamations in verses 22 to 27, regarding the real nature of the so-called Bhakthi-Marga, which has an inescapable tendency to drag a Jiva into the whirlpool of Samsara ? What can be more perplexing than the searching questionnaire, contained in verses 28 to 34, as to who is Jiva ; what is Brahma ; what is Samsara and its origin, and how it affects us ; what is your goal and by what means can you reach it ? What can be more attractive than the doctrines of Self-surrender, set out in verses 35 to 41 ? What can be more brilliant than the flights of philosophic

conception and imagery, poured forth in verses 51, 53, 80, 92, 100, 101, etc. ?

IX. There is fragrant flower of poetry, blushing unseen, in *Sabharanjana Sataka* :

जानाते यन्न चन्द्रार्कौ जानते यन्न योगिनः ।
जानीते यन्न भर्गोऽपि तज्जानाति कविः स्वयम् ॥

(सभारञ्जनम् 23.)

"What the all-reaching rays of the sun and moon cannot penetrate, what defies the vision of Yogis, what escapes the notice even of the all-knowing Siva, is visible to a poet instinctively." True to his words, the born poet that Nilakantha is, he visualised and wrote what all has been said in the first 60 verses, while still blind. But, when the lamentations reach a very high pitch in the 61st sloka, wherein he complains that neither the perfect चित्तशुद्धि acquired by Nilakantha, the Karmatha, nor the divine fervour in which the Bhakthi-intoxicated Nilakantha was swimming, affords any help, in his attempt to perceive the sublime beauty of the feet of Sree Minakshi, in spite of Her condescending mercy and grace, without the aid of the physical eye, the eyes regain their power. What follows ? The poet, philosopher, saint and sage bursts forth, in language of torrential eloquence, into an ecstatic description of Devi, the feet which constitute the cynosure of even Yogis like Suka, with the nails eclipsing the brilliance of the moon and the tingling and inviting नूपुर, the utsanga coveted by Brahma, Vishnu and Rudra, the thigh which chases away the misery of Siva resting on it, her

flowing garland, the shining pomegranate-like row of teeth, the smile which brings its Mangala to the afflicted devotees, the ताम्बूलसार which is the quintessence of the Sara of all Agamas, the Nasamani, the Tatanka, and Kataksha, etc.

Such is the *Anandasagarastava* of Nilakantha, wherein are treasured the richest devotional and philosophic concepts, and which takes the author, the reader, the hearer, the translators and editors all alike to the Ananda of the Divine Presence.

MADURA
10—3—1944

(Sd.) N. NATESA AYYAR
Dharmabhushana, Dharma Samvardhaka.

முகவுரை

ஆனந்தஸாகரஸ்தவம் இயற்றிய
மஹாகவி ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் அவர்களின் வரலாறு

ஸ்ரீ ய. மஹாலிங்க சாஸ்திரிகள் M.A., B.L. எழுதியது

விரிஞ்சிபுரத்திற்கு சமீபத்திலுள்ள அடையப்பலம் என்ற கிராமத்தில் ஸ்ரீமத் ஆசார்ய தீக்ஷிதர் அவர்களுக்கு பௌத்திரராகவும், ஸ்ரீரங்கராஜ தீக்ஷிதர் அவர்களுக்குப் புத்திரராகவும், அவதரித்த ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் அவர்களின் இளைய ஸகோதரர் ஸ்ரீ ஆச்சான் தீக்ஷிதர். ஸ்ரீ ஆச்சான் தீக்ஷிதருடைய புத்திரர் ஸ்ரீ நாராயண தீக்ஷிதர். ஸ்ரீ நாராயண தீக்ஷிதரின் இரண்டாவது குமாரர் ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர். இவர் அன்னை பூமிதேவி.

கி. பி. பதினாறுவது நூற்றாண்டின் மத்தியில் முகம்மதியர்களால் விஜயநகர ஸாம்ராஜ்யம் உடைபட்டுப் போய் விட்டது. சிதறுண்ட அந்த ஸாம்ராஜ்யத்தின் பின்னமான அம்சங்களைத் திரட்டிக்கொண்டு, பல சில்லரை ராஜ்யங்கள் தலைகிளப்பின. பெனுகொண்டா, வேலூர், தஞ்சாவூர், மதுரை என்றவாறு நான்கு பின்னங்கள் உருவெடுத்து வலுக்க வாரம்பித்தன. பெனுகொண்டாவில் பழய விஜயநகர ராஜவம்சத்தைச் சேர்ந்த திருமலைராயனும், அவனுக்குப் பின் வேங்கடபதிராயனும், ராஜ்ய ஸ்தாபனம் செய்து கொண்டார்கள். மற்ற ராஜ்யங்களில் நாயகர்கள் ஆண்டு வந்தார்கள். இவர்களில், வேலூர் நாயகர்கள் விஜயநகர ராஜ்ய காலம் முதற்கொண்டே ஆண்டுவந்த தனிப்பட்ட ஒரு பழய ராஜவம்சத்தைச் சேர்ந்தவர்கள். தஞ்சாவூர், மதுரை நாயகர்கள் விஜயநகரத்தின் ஸேனாதிபதிகளாகவிருந்து, பின்பு சுதந்திர அரசர்களானவர்கள். ஸ்ரீமத் ஆசார்ய தீக்ஷிதர், விஜயநகரம் கிருஷ்ணதேவராயரின் ஸபையை அலங்கரித்தவர். ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் வேலூர், பெனுகொண்டா ஸம்ஸ்தானங்களில் விளங்

இயவர். ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் மதுரையில் மந்திரி பதவி வஹித்தவர். இங்ஙனம் அடையப்பல வம்சத்திலுதித்த இப்பெரியோர்கள் அவ்வப்போது தலைதுக்கிய பிரபல ராஜ கரங்களில் பிரகாசித்து வந்தனர் என்று தெரிகிறது. ஸ்ரீ நீல கண்ட தீக்ஷிதர் காலத்தில் வடக்கேயுள்ள பெனுகொண்டா, வேலூர் ராஜ்யங்களும் அவிந்துபோகத் துவக்கிவிட்டதா லும், தெற்கே தஞ்சாவூர், மதுரை ராஜ்யங்கள் வலுத்து மிக்கப் பெருமை யடைந்து வந்ததாலும், அரிய பெரிய வித் வான்கள் தஞ்சாவூரில் வந்து குவிய ஆரம்பித்ததாலும், இவரும் முதலில் வித்யாப்யாஸத்தின் பொருட்டும், பின்பு வித்யா பிரசாரத்தின் பொருட்டும், தம் முன்னோர்கள் இருந்த தேசத்தைவிட்டுத் தெற்கே வந்து குடியேற நேரிட்டது.

ஸ்ரீ நிலகண்ட தீக்ஷிதர் பால்யத்தில், தன் தகப்பனுரை யிழந்ததால், பெரிய தாத்தாவான ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் அவர்களின் ஸம்ரக்ஷணையில் வளர்ந்து வந்ததாயும், ஸ்ரீ தீக்ஷி தர் அவர்கள் தன்னுடைய அந்த்ய காலத்தில், தன் பௌத் ரர்கள் பதினேறு பெயர்களுடன் பன்னிரண்டாவதாகத் தன் தம்பி பௌத்ரனையும் சேர்த்துக்கொண்டு, தன் சொத் துக்களை பாகம் செய்துகொடுக்க நினைத்தார் என்றும், இதற் குத் தன் புத்திரர்கள் திருப்தியாக விடை கொடுக்காததால்; ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் அச்சிறுவனைக் கூப்பிட்டுப் புஸ்தக அரையில் சென்று ஏதாவது ஒன்று, இரண்டு புஸ்தகங்களை எடுத்துவா என்று உத்தரவிட்டதாயும், சிறுவன் உள் சென்று ரகுவம்சத்தையும், தேவீ மாஹாத்ம்யத்தையும் எடுத்து வந்ததாயும், ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள், அதைப் பார்த்து சந்தோஷித்து, "நீ தேவியின் அருளைப் பெறுவாய், மஹா கவி யாவாய்," என்று அனுக்கிரஹித்ததாயும் பெரி யோர்களின் வதந்தி.

ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர்* அவர்கள் தனது 73-வது வய தில் சிதம்பர க்ஷேத்திரத்தில் பௌதிக தேகத்தை விட்

குறிப்பு :—* தீக்ஷிதர் அவர்கள் காலமானது 1593-ல், ஸ்ரீ நீலகண்டர் 1582 சுமாரில், பிறந்தார்.

டகன்றபோது, ஸ்ரீ நீலகண்டருக்கு வயது பன்னிரண்டு. அவ் விளம் பிராயத்தில் தன் பெரிய தாத்தாவின் பெருமையை தான் பார்த்து அனுபவித்ததை, தான் இயற்றிய வைராக்ய சதகத்தில் பின்வருமாறு சூசிப்பித்திருக்கிறார்.

"अतिगम्भीरमनाविलमक्षोभ्यमदृष्टपारमविलङ्घयम् ।
अविरलतरङ्गसंकुलमैक्षिषि विज्ञानसागरं महताम् ॥"

"அதிக ஆழமானதும், கல்மஷ மற்றதும் கலக்கமுடியாததும், கரை காணமுடியாததும், கடக்கத் தகாததும், இடைவிடாமல் அலைமோதுவதுமான பெரியோர்களின் அறிவுக் கடலை நான் கண்டிருக்கிறேன்."

தன் கிரந்தங்களில் எல்லாவற்றிலும் இவர், தன் பெரிய தாத்தாவின் கரைகாண முடியாத விஞ்ஞான ஸமுத்ரத்தின் பெருமைகளை, வருணித்திருக்கிறார்.

பெரிய தாத்தா காலமானபிறகு, தன்தாயாரை அழைத்துக்கொண்டு ஸ்ரீ நீலகண்டர் மதுரையை நோக்கித் தெற்கே வந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அவருடைய நள சரித்திர நாடகம் காஞ்சிபுரத்தில் எழுதப்பட்டதாய் தெரிகிறபடியாலும், கங்காவதரணத்தில் அவர்தான் காவேரீ தீரத்தில் வஸிப்பதாகக் குறிப்பிட்டிருப்பதாலும், தன்னை அவர் தஞ்சாவூர் மந்திரியான ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரின் புத்திரரான ஸ்ரீ வேங்கடேச்வர மகியின் சிஷ்யனாக சொல்லிக் கொள்வதாலும், பல வருஷங்களுக்குப் பின்னேதான், அவர் மதுரை சென்றார், என்று ஊகிக்கவேண்டி யிருக்கிறது. (1) முகுந்த விலாஸம், (2) ரகு வீரஸ்தவம், (3) நள சரித்திரம், (4) கங்காவதரணம் முதலியன அவர் பால்யத்தில் இயற்றின கிரந்தங்கள். நள சரித்திரமும், கங்காவதரணமும் நெருங்கிய ஸம்பந்தமுடையவை. இரண்டிலும் தன் பிதாவான ஸ்ரீ நாராயணாத்வரிக்கு நமஸ்காரம் சொல்லப்படுகிறது.

नारायणाध्वरीन्द्राय नमोऽस्तु ज्ञानसिन्धवे ।
शारदा यत्कटाक्षाणां साऽप्यवेतनकिंकरा ॥

"எவரின் கடாக்ஷங்களுக்கு ஸரஸ்வதீ தேவியானவள் கூலியில்லா ஊழியக்காரி யாகிருளோ, அப்பேர்ப்பட்ட ஞான ஸமுத்ரமாகிய (என்பிதா) நாராயண தீக்ஷிதருக்கு நமஸ்காரம்."

இரண்டிலும் தன் கவிதை அம்பிகையின் அனுக்ரஹத்தால் ஏற்படுவதென்று தெரிவிக்கிருர்.

चन्द्रशेखरसव्यार्धचरणोन्मार्जनाम्भसाम् ।
विवर्ता जगदुत्सङ्गे विहरन्ति मदुक्तयः ॥

"அர்த்தநாரீச்வரரின் இடது காலைக் கழுவிய தீர்த்தத்தின் திரிபு தானுகிய என் காவ்யமொழிகள் உலகளவே பெருகி விளையாடுகின்றன."

இரண்டிலும் கவி தான் வேதாந்த விசாரம் செய்து கொண்டு ஆத்ம ஸ்வரூப தியானத்தில் ஈடுபட்டு, லோக வியாபாரங்களினின்று ஒடுங்கி யிருப்பதாயும் வெளிப்படுத்துகிருர்.

कथमयं कविः अन्तर्मुखः त्रय्यन्तविचारप्रवृत्तोऽपि करोति स्म नाटकेऽप्यभिरुचिम् ।

"நிவிருத்தி மார்க்கத்தில் ஈடுபட்டவரும், வேதாந்த விசாரம் செய்து காலம் கழிப்பவருமான இந்தக் கவி, நாடக மியற்றுவதில் குதூஹலம் கொள்ள எவ்விதம் நேர்ந்ததோ?" என்று நள சரித்திரத்தில்,

सति सह्यसुतातीरे सति त्रय्यन्तशीलने ।
गन्तुं निश्चितवानस्मि गङ्गां केनापि हेतुना ॥

"காவேரீ தீரத்தில் வாஸமிருக்கையில், வேதாந்தவிசாரமிருக்கையில், ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டு கங்கைக்குப் போக வேணுமென்று தீர்மானித்திருக்கிறேன்," என்று கங்காவதரணத்தில்.

இரண்டிலும், காசீ யாத்திரையில் தனக்குள்ள ஆவலைக் காட்டுகிருர்.

कालं जेतुमुपायौ द्वौ कलिकल्मषसंप्लुतम् ।
कथा वा निषधेशस्य काशी वा विश्वपावनी ॥

"கலியின் பாபங்களினுல் ஆக்ரமிக்கப்பட்ட இந்தக் காலத்தை வெல்லுவதற்கு நளமஹாராஜனின் சரித்திரமும், ஸகல ஜீவராசிகளின் பாபங்களைக் களையவல்ல காசி க்ஷேத்திரமும், இவ்விரண்டும்தான் உபாயங்களாகின்றன," என்று நள சரித்திரத்தில்.

सति सह्यसुतातीरे सति त्र्यन्तशीलने ।
गन्तुं निश्चितवानस्मि गङ्गां केनापि हेतुना ॥

என்று கங்காவதரணத்தில்.

இந்த ச்லோகத்தில் '**सति सह्यसुता तीरे**' என்ற வாக்யத்தினுல், இவர் 'கங்காவதரணம்' இயற்றிய சமயம், காவேரீ தீரத்தில் வஸித்துவந்தார் என்று வெளியாகிறது. அதி பால்யத்தில் இவருக்கு சிவபக்தியும், அம்பிகா பிரஸாதமும், நிவிருத்தி மார்க்கத்தில் ருசியும், வேதாந்த விசாரத்திலும் ஆத்மசிந்தனையிலும் ஈடுபடுதலும், கலிதோஷங்களை வெல்ல நளன் முதலிய மஹா புருஷர்களின் புண்ணிய கதைகளைத் கவிதையினுல் சித்திரிப்பதும், மோக்ஷஸாதனமாகக் காசி க்ஷேத்ராடனத்தைக் கோருவதும், இயல்பாக விருந்ததெனத் தெரிகிறது.

இவர் வெகுகாலம்வரையில் காசி பிரயாணத்தை மறக்கவில்லை. ஆனுல் கடைசிவரை அவர் மனோரதம் ஸித்திக்கவில்லை என்று தோன்றுகிறது.

न गृहीतं श्रुतिहृदयं न च निगृहीतं परिप्लवं चेतः ।
इच्छामि च धाम परं गच्छामि च विश्वनाथपुरीम् ॥

"வேதங்களின் அந்தரங்கமான அபிப்பிராயம் புரியவில்லை. நிலைகொள்ளாமல் அலைந்துகொண்டிருக்கும் இந்த மனதையும் அடக்கமுடியவில்லை. ஆனுல் மோக்ஷத்தையடைய விரும்புகிறேன். ஆதலால் ஸ்ரீ விச்வநாதபுரமான காசிக்குப் போகப்போகிறேன்," என்று (5) வைராக்ய சதகத்தில் கூறுகிருர். ஆனந்தஸாகர ஸ்தவத்திலும் பல தடவை காசி முக்திக்ஷேத்திரம் என்பதையும், தான் அங்கு

போகவேண்டும் என்பதையும் ஸ்மரிக்கிருர். சாந்தி விலாஸம், ஆனந்தஸாகரஸ்தவம் முதலியன இவருடைய முதிர்ந்த வயதில் எழுதப்பட்டவையாதலால், இவருடைய காசி பிரயாணம், அதுவரை பிரார்த்தனையாகவே இருந்ததல்லாமல், நிறைபெறவில்லையென்று நினைக்கவேண்டியிருக்கிறது.

'काल जेतुमुपायौ द्वौ' என்ற ச்லோகத்தில் மற்ருெரு உபாயமாக இவர் ஆரம்பித்த நளசரித்திரமும் முடிவுபெறவில்லை. நளதமயந்தி விவாஹ பர்யந்தம் எழுதியிருக்கிருர். கலியின் திருவிளையாடல்களை பிரஸ்தாபிக்கும் முன் கிரந்தம் நின்றுவிடுகிறது. அதுவும் ஈச்வர ஸங்கல்பம் போலும்.

இவருடைய (6) சிவ லீலார்ணவ மஹாகாவ்யம் மதுரையைப்பற்றியது. இவருடைய (7) நீலகண்டவிஜய சம்பு, (8) ஸபாரஞ்ஜன சதகம், (9) கலிவிடம்பனம், (10) சிவோத்கர்ஷமஞ்ஜரீ, (11) சிவதத்வ ரஹஸ்யம், (12) சாந்திவிலாஸம், முதலியன இவர் மதுரையில் மந்திரி பதவியிலிருந்து ராஜ்யபாரத்தை வஹிக்கும்போது எழுதப்பட்டவை என்று நினைக்க இடமிருப்பதால், இவர், தன்னுடைய மத்யவயதில் மதுரை வந்திருக்கவேண்டும். இவர் வைதுஷ்யமும், கவித்வமும், குலமும், சீலமும், லோக ஞானமும், வாக் சக்தியும் தான் இவருடைய கீர்த்தியைப் பரப்பி, இவரை மதுரை நாயக்கரின் ஸபைக்குக் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கவேண்டும். இந்த ஸம்பவம் கி. பி. பதினேழாவது நூற்றுண்டு துவக்கியபின், இவருக்கு சுமார் நாற்பது வயதில் நேர்ந்திருக்கலாம். இவர் திருமலை நாயக்கருக்கு மந்திரியாயிருந்தது பதினேழாவது நூற்றுண்டின் இரண்டாவது காலில். இவர் இலௌகிக வித்யா விஷயங்களும், தர்ம விஷயங்களும். அக்காலத்தில் பண்டிதர்களும், கவிகளும் இவர் மூலம் ராஜாஸ்தானத்தில் பெருமை பெற்றதாய்த் தெரிகிறது. இவர் ஆதரவைப் பெற்ற சொக்கனுதமகி, ராமபத்ர தீக்ஷிதர், சக்ரகவி முதலியவர்கள் இவரைக் கொண்டாடுகிருர்கள். மேலும் ஸ்ரீ மீனுக்ஷி கோவில் திருப்பணி, புதுமண்டப நிர்மாணம், விக்ரஹகங்கள் ஸ்தாபனம், உத்ஸ

வங்களின் பாகுபாடு முதலிய காரியங்களை இவர் சாஸ்திரங்களையும் ஸம்பிரதாயத்தையும் ஒட்டி திட்டம்செய்து நிறைவேற்றி வைத்தார் என்று தெரிகிறது. ஸ்ரீ ஹாலாஸ்ய மாஹாத்ம்யத்தை அனுஸரித்து, ஸ்ரீ மீனாக்ஷி ஸௌந்தரேச்வராளுக்கு ஒவ்வொரு வருஷமும் நடக்கவேண்டிய உத்ஸவாதிகள் நிர்ணயிக்கப்பட்டன. டெயிலர் துரை, மதுரை சரித்திர ஸம்பந்தமான தஸ்தாவேஜிகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். நெல்சன் துரை என்பவர் மதுரையின் சரித்திரச் சுருக்கம் ஒன்று வரைந்துள்ளார். இவர்களின் குறிப்புகளில் அய்யாதீக்ஷிதர் (ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர்) சொல்படி கோவில் உத்ஸவங்கள் திட்டம் செய்யப்பட்டதாய் நன்கு விளங்குகிறது. இந்த ஸந்தர்ப்பத்திலேதான் அவர் ஷை உத்ஸவங்களுக்கு ஆதாரமான ஸ்ரீ ஹாலாஸ்ய மாஹாத்ம்யக் கதைகளை சிவலீலார்ணவம் என்ற மஹாகாவிய ரூபமாய் இயற்றினார் என்பதற்குச் சந்தேகமில்லை. மேலும் மற்றொரு சரித்திரமும் அங்கு கண்டிருக்கிறது. யாதெனில் பின் வருமாறு :—புதுமண்டப நிர்மாணம் 1626-ல் துவக்கப்பட்டு, 1633 வரை நடந்து முடிவுபெற்றது. இந்த வேலையை நிறைவேற்றினவன் சில்பசாஸ்திர நிபுணனான சுமந்திர மூர்த்தி ஆச்சாரி. அவன் ஆரம்பத்தில் (1626-ல்) ஏகபாத மூர்த்தியின் சிலையை செதுக்கிய ஒரு கல்தூணை ஸ்தாபிக்க வேலை முடித்து ஒரு சுபமுகூர்த்தம் வைத்திருந்தான். அந்த மூர்த்தி பிரம்மாவும், விஷ்ணுவும் சிவனிடமிருந்து உண்டானார்கள் என்று காண்பிப்பதால், சிவோத்கர்ஷத்தை விரும்பாத வைஷ்ணவ பண்டிதர்கள் அக்காலை நாட்டக்கூடாதென்று ஆக்ஷேபித்து அரசனிடம் மனுசெய்துகொண்டார்கள். அரசன் நடுநிலைமை வஹித்து ஏகபாத மூர்த்தியின் தத்துவத்தைப்பற்றிய விசாரணைக்கு உத்திரவு கொடுத்தான். சைவர்களும் வைஷ்ணவர்களும் தங்கள் தங்கள் பிரமாண கிரந்தங்களைத் திரட்டிக்கொண்டு வியவஹாரம் நடத்த ஸித்தமாயினர். ஆறுமாத காலம் இந்த விவாதம் நடந்தது. மேற்கூறிய டெய்லர் துரை இந்தவிடத்தில் சைவர்

கள் கக்ஷிக்கு வாதத்தை நடத்த அப்பாதீக்ஷிதர் நியமிக்கப் பட்டார் என்றும், வைஷ்ணவர்களுக்கு ப்ரதிநிதியாக அய்யா தீக்ஷிதர் வாதம் நடத்த முன்வந்ததாயும் எழுதியிருக்கிறார். தமிழில் "அப்பா" என்பதும், "அய்யா" என்பதும் சற்றேறக்குறைய ஒரேமாதிரியாக எழுதப்படுகிறபடியால் இவர்கள் மொழிபெயர்ப்பிலோ, அல்லது இவர்கள் மூல தஸ்தாவேஜியிலேயோ, தவறு இருக்கிறதென்று நான் *1929* J. O. R. Madras Vol. III Part II பக்கம் *143-145*-ல் நிரூபித்திருக்கிறேன். ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதருக்கு வியவஹாரப் பெயர் அய்யா தீக்ஷிதர் என்பதே. அதே டெய்லர் துரை, அய்யாதீக்ஷிதர் சொல்படி ஸ்ரீ மீனாக்ஷி கோவில் உத்ஸவங்கள் திட்டப்படுத்தப்பட்டன என்று எழுதுகிறார். டி. எஸ். குப்புஸ்வாமி சாஸ்திரிகள் முதல் விமர்சகர்கள் யாவரும் அப்பா தீக்ஷிதர் என்பவர் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் என்று எண்ணிக்கொண்டு, அய்யா தீக்ஷிதர் யாரோ ஒரு வைஷ்ணவர் என்று தீர்மானித்து விட்டார்கள். * இதிலிருந்து ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் *1626* முடியவாவது ஜீவித்திருக்க வேண்டுமென்றும், ஆகையால் *1553*-ல் அல்லது அதற்குப்பின் பிறந்திருக்கவேண்டுமென்று ஸித்தாந்தம் செய்துகொண்டனர். அய்யா தீக்ஷிதர் என்ற நீலகண்ட தீக்ஷிதர் வைஷ்ணவர் கக்ஷியில் தலைமை வஹித்து, சைவத் தலைவரான தன் பெரிய தாத்தாவுடன் வாதப்போராடினார் என்பது முற்றிலும் அஸம்பாவிதம் என்பது நான் சொல்லாமலே படிப்பவர்களுக்கு விளங்கும். இந்த எழுத்துப் பிழையைத் திருத்திக்கொண்டால் எல்லாம் நேராகி விடுகிறது. அதாவது வைஷ்ணவர்களுக்கு அப்பா தீக்ஷிதரும், சைவர்களுக்கு அய்யாதீக்ஷிதரும் தலைவர்கள். அய்யா தீக்ஷிதர்தான் புதுமண்டப நிர்மாண வேலையை மேல்பார்த்து

---

* அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் தனது 73-வது வயதில் காலமானார் என்பது, ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரும் மற்றவர்களும் நிர்ணயமாய்க் கூறியிருப்பதால் யாரும் அறிந்த விஷயம். அவர்களின் ஜீவகாலம் 1520 முதல் 1593 வரை என்று J. O. R-ல் என்னால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

வந்த மந்திரி ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர். அவருடைய தூண்டுதலின்பேரிலேயே இந்த ஏகபாதமூர்த்தி வேலை செய்யப்பட்டிருக்கலாம். இவர் தன் சிவோத்கர்ஷ மஞ்ஜரீ, சிவதத்வ ரஹஸ்யம் முதலிய சைவகிரந்தங்களை இந்த ஸமயத்திலேயே இயற்றியிருக்கவேண்டும். இந்த இரண்டு கிரந்தங்களிலும் சிவபரமான ஸகல சாஸ்திர புராணங்களின் ஸாரமும் ஒருங்கே திரட்டப்பட்டிருக்கிறது. வைஷ்ணவ அப்பா தீக்ஷிதர் அரசாணிப்பால் வேங்கடாசாரியாரின் பாட்டனார். கர்னாடராஜனின் குருவான தாதாசாரியாரின் தங்கை புருஷன். விவாதத்தில் சிவோத்கர்ஷம் ஸ்தாபிக்கப்பட்டு, ஏகபாதமூர்த்தி ஸ்தம்பமும் நாட்டப்பட்டது. இன்றைக்கும் புதுமண்டபத்தின் வாயிலில் அந்த ஸ்தம்பத்தைப் பார்க்கலாம்.

புதுமண்டப நிர்மாணம் நடந்து வந்தது.

புது மண்டபத்தில் நடுவரிசைத் தூண்களில் மதுரை நாயகர்களின் சிலைகள் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அவைகளில் ஒரு தூணில் தன் ஏழுபத்னிகளுடன் திருமலை நாயக்கர் அமைக்கப்பட்டிருக்கிறார். கல்தச்சன் திருமலைநாயகரின் மனைவிகளுக்குள் மூத்தவளான பட்டமஹிஷியின் சிலையை உருப்படுத்திக்கொண்டிருந்தான். அவ்வுருவத்தின் இடது துடையில் சில்லுப்பெயர்ந்து விட்டது. சிலை, பின்னமாகிவிட்டதெனக்கருதி, சில்பி மறுபடி வேறு சிலை தயார் செய்யத்துவக்கினான். அப்போது ஸ்ரீநீலகண்ட தீக்ஷிதர் அவர்கள் வேலைகளை கவனிப்பதற்காகச் சுற்றி வந்துகொண்டிருந்தார். சில்பி முகவாட்டத்துடன் வேலை செய்வதைப்பார்த்து, ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் "என்ன விசேஷம்?" என்று கேட்க, அவன், தான் எவ்வளவு கவனமாய்ச் செதுக்கியும், சிலைக்கு பின்னம் ஏற்பட்டதையும், அதனால் மறுபடிவேலை செய்ய நேரிட்டதையும், தெரிவித்துக் கொண்டான். ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் சற்று யோஜித்துப்பார்த்து, "அப்பா நீ இனி எவ்வளவு சிலைகள் அடித்தாலும் இப்படியே நேரும்; ஏனெனில் இதில் கடவுளின்

அருள் இருக்கிறது. உன்பக்தி மிகுதிக்கும், உன் அந்தரங்க சுத்தத்திற்கும், உன் உயர்ந்த குணங்களுக்கும், பிரஸன்னமாகி ஈச்வரன் உனக்குத்தெரியாத அம்சங்களைக்கூட, உள்ளபடி இருக்கச்செய்து, உன் சில்பத்தை சிறப்பிக்க நினைக்கிறார்போலும். உத்தமஸ்திரீ லக்ஷணம் பொருந்திய மஹாராணிக்கு இடதுதுடையில் இதே இடத்தில் பெரியதோர் மச்சம் இருக்கவேண்டும். இது ஸாமுத்ரிக லக்ஷணங்களில் கூறப்பட்டுள்ளது. ஆகையால் நீ அந்தச்சிலையை அப்படியே வைத்துவிடு," என்றார். இன்றைக்கும் மூத்தமஹிஷியின் சிலையில் அந்த பின்னத்தைப்பார்க்கலாம். நாயகரும் பத்னிகளும் உள்ள தூண்வேலை முடிந்ததும், திருமலைநாயக்கர் வேலைத்திறத்தைப் பார்வையிடவந்தார். மூத்தராணியின் துடையில் பின்னமிருப்பதை அவர் கவனித்து, "ஏன் இந்தபின்னம் இருக்கிறது?" என்று சில்பியை வினவினார். சில்பி, தான் மறுசிலை செதுக்கத்துவக்கியதையும், தீக்ஷிதர் அவர்கள் மஹாராணிக்கு அந்தவிடத்தில் மச்சம் இருப்பதால் அவ்விதம் பின்னம் ஏற்பட்டதென்றும், அதனால் பின்னம் தோஷமாகாதென்றும், சமாதானம் சொன்னதையும் தெரிவித்தான். இதைக்கேட்டதும் அரசனுக்குக் கண்கலங்கியது. தலை கிருகிருத்தது. மீசை துடித்தது. ஒன்றும் பேசாமல் பரிவாரங்களுடன் அரண்மனைக்குத் திரும்பிவிட்டார். அங்குசென்று மனம் குழம்பி, மஹிஷிகளுடனும் பிரசன்னமாய்ப் பேசாமல், இரவுயோஜனையில் ஆழ்ந்திருந்தார். மறுநாள் காலையில் மனதை உறுதிசெய்துகொண்டு அரண்மனை அதிகாரி ஒருவனைக்கூப்பிட்டு. "ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களை நான் பார்க்கவேண்டுமென்று சொல்லி உடனே அழைத்துவா," என்று உத்திரவிட்டார்.

தீக்ஷிதர் அவர்கள் பூஜையிலிருந்த சமயம் அரசனின் உத்திரவு அவருக்கு அறிவிக்கப்பட்டது. இவ்விதம் அழைப்பு அவருக்குப் புதிதாதலினால் அவர் அரசனின் வரைமுறை மாறியதற்கு என்னகாரணம் என்று யோஜித்துப்பார்த்தார். தேவியின் அனுக்ரஹத்தால் ஞானசக்திபெற்ற அவ

ருக்கு, அரசன் மூடத்தனத்தால் தன்பேரில் விபரீத எண்ணம் கொண்டு கடுங்கோபத்துடன் தன்னை வர ஆஜ்ஞாபித்திருப்பது உள்ளத்தில் விளங்கியது. மனம் வருந்தினர். ஐச்வர்யவான்களின் பேதமை இதுவே என்று வெறுத்தார். இந்நிலைமையில் அரசனைபார்ப்பது தகாதென்று நிச்சயம் செய்துகொண்டு அம்பிகையினிடத்தில் தன் துயரத்தைத் தெரிவித்துவிட்டு, கர்ப்பூரஹாரத்திசெய்து, அந்த கர்ப்பூரத்தையே தன் இரு கண்களிலும் வைத்துக் கண்களை அவித்துக் கொண்டார். "அரசன் எனக்கு விதிக்க எண்ணியிருக்கும் தண்டனையை நானே விதித்துக்கொண்டதாய் சொல்லிவிடு," என்று வந்தவனுக்கும் விடைகொடுத் தனுப்பினர். கண் அவிந்த நிலைமையில் பரமேச்வரியின் திவ்யமங்கள ஸ்வரூபத்தைப் பாதம்முதல் சிரஸ் பர்யந்தம் தியானம்செய்து கொண்டு ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித்தார். இவர் ஸ்தோத்திரம் செய்யும்போது பாதம் முதல் சிரஸ்பர்யந்தம் தேவியின் அந்த அந்த அவயவங்கள் கிரமமாக இவருக்கு பிரத்யக்ஷமாயின. ஸ்தோத்திரமுடிவில் இவர் பூராவாகக் கண் ஒளியைப்பெற்றுர். இந்த ஸ்தோத்திரமே * (13) ஆனந்தஸாகரஸ்தவம். ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களுக்குக் கண் கொடுத்த பரதேவதை இதில் பிரஸன்னமாகிருள். † இவர்

குறிப்பு: * ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களின் மற்ற க்ருதிகள்:—(14) அன்யாபதேச சதகம். (15) குருராஜஸ்தவம். தனக்கு அம்பிகைவிஷயமான உபாஸனுக்ரமங்களை உபதேசித்த கீர்வாணயோகீந்திரர் என்ற ஸந்யாஸி ஒருவரைப்பற்றிய ஸ்துதி. பூர்ணமாக அகப்படவில்லை.

(16) கையட வியாக்யானம் (வியாகரணம்) ஒன்று செய்திருப்பதாய் சொல்லுகிருர்கள். புஸ்தகம் இருப்பதாய் தெரியவில்லை.

† இதில் தேவியின் சரணவர்ணனையில்

अव्याजसुन्दरमनुत्तरमप्रमेयमप्राकृतं परममङ्गलमङ्घ्रिपद्मम् ।
सन्दर्शयेदपि सकृद् भवती दयार्द्रा द्रक्ष्यामि केन तदहं तु विलोचनेन ॥

"எந்தக்கண்ணினுல் உன்சரணகமலத்தை நான்பார்ப்பேன்?" என்று கவிசொல்வது மூலம் தனக்கு அந்த சமயம் கண்பார்வையில்லை என்பதையும் சிறிது சூசனைசெய்கிருரோ என்று நினைக்கும்படியிருக்கிறது.

தாமே கர்ப்பூரத்தால் தன் கண்களை அவித்துக்கொண்டதை யும் பின்பு தேவியைத் துதித்ததையும், அதனல் தேவியின் அனுக்ரஹத்தைப்பெற்று இழந்த கண்ணொளியைத் திருமபப் பெற்றதையும், சாரர்கள் மூலம் அறிந்துகொண்ட அரசன் பச்சாத்தாபமடைந்து ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் ஸன்னிதானத் திற்கு ஓடிவந்து, அவர் பாதங்களில் பணிந்து பரிதவித்துத் தன்னை மன்னிக்குமாறு வேண்டிக் கொண்டான். ஸ்ரீ தீக்ஷி தர் அவர்கள் அவனுக்கு சமாதானம் சொல்லிவிட்டு ராஜ ஸேவையை விடுத்து, மதுரை விட்டகன்று தாம்ரபர்ணீதீரம் சென்று, அங்கு பாலாமடை என்ற கிராமத்தில் சிலகாலம் வஸித்துப் பின்பு துறவரம்பூண்டு, அங்கேயே ஸித்தியடைந் தார். பாலாமடை கிராமத்திற்கு நீலகண்ட ஸமுத்ரம் என்று பெயர் வழங்குகிறது.

ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் திருமலை நாயக்கர் ஸபையை விட் டகன்றதற்கு வேறுசில காரணங்களும் சொல்லுகிறுர்கள். ராஜஸேவையில் அவருக்கு, அதிருப்திக்குப் பலவிதமான காரணங்கள் இருந்திருக்கக்கூடும். ராஜஸ தாமஸ புத்தி யுடைய ஐச்வர்யவான்களிடம் விவேகிகள் நெருங்கிப்பழகு வது எப்போதும் இடருள்ளதே என்பது வாழ்க்கைதத்து வம். ஸ்ரீ அப்பய்யதீக்ஷிதர், தன்மதப்பிரசாரம், கிரந்தபிர சாரம் முதலிய கார்யங்களில் அரசர்களின் ஊழியத்தை ஏற்றுக்கொண்டவராதலால், தனக்கு உதவியாயிருந்த அர சர்களைக் குறிப்பிட்டும், புகழ்ந்தும் எழுதுகிறுர். ஸ்ரீ நீல கண்ட தீக்ஷிதரோ, அரசரின் கார்யங்களை, தர்மவழிகளில் நடத்திவைக்கப் பொறுப்பைத்தான் ஏற்றுக்கொண்டவரா தலினல், பொதுவாகவும், அன்யாபதேசமாகவும் ராஜ ஸேவையை நொந்துகொள்வதைப் பார்க்கிறேம். அவருடைய வைராக்யத்தையும், முமுக்ஷுத்வத்தையும், விரைவில் பழுக் கச்செய்தது ராஜபரிசயம் என்று சொல்லலாம். இந்த உத்தமர் சாஸ்திர ஞானத்தையும் கரைகடந்து, லௌகிகப் பெருமையின் உன்னத சிகரத்தையும் அடைந்து, அனுபவித்து, மனம்தெளியாமல் கவிதையில் ஆச்வாஸத்தையும், தேவி

யிடம் சரணுகதியில் க்ருதக்ருத்யதையையும் முடிவான தத்து வங்களாகக் கண்டுகொண்டார் என்பது நம்போன்ற ஜீவ ராசிகள் அவருடைய சரித்திரத்திலிருந்து தெரிந்துகொள்ள வேண்டிய ஸாராம்சம். அக்காலத்திலேயே ஸ்ரீ தீக்ஷிதரவர் களை அறிஞர்கள் தைவிகம்பொருந்தியவரென்று மதித் திருந்தார்கள். அவருடைய சிஷ்யர் மஹாகவி, ஸ்ரீராமபத்ர தீக்ஷிதர், அவரை ஸாக்ஷாத் அம்பிகையின் அவதாரமென்றே சொல்லுகிறுர்: இம்மஹானுக்கு அம்பிகை பிரத்யக்ஷம் என்று சொல்லக்கூடிய சில கதைகள் இருக்கின்றன. ஆனந்த ஸாகரஸ்தவத்தைப் பார்த்தாலே, நமக்கு இந்தக் கதைகளில் ஒருவித நம்பிக்கை ஏற்படலாம். இந்தக்கவி தையை வாசிப்பவர்களுக்கு, "இதற்கும் தேவி பிரத்யக்ஷ மாகவில்லை என்றால், தேவியே இல்லையென்று சொல்லிவிட லாம்" என்று தோன்றும். இந்த ஆனந்த ஸாகரஸ்தவத் தில் ஜீவன்முக்திநிலையை நெருங்கும் ஒரு ஆத்மாவின் த்வனி ஒலிக்கிறது. துக்ககாரணமான பந்தங்களையும், ஸந்தேகங் களையும் வேரறுக்க உதவாமல் சுற்றிச் சுழலவைக்கும் சாஸ் திரஞானத்தையும், அற்பபலனளிக்கும் கர்மமார்க்கத்தை யும் நிராகரித்து, எங்கும் நிறைந்த பரிபூர்ணசக்தியான பரதேவதையின் ஸாயுஜ்யஸாம்ராஜ்யத்தை இந்த ஆத்மா நாடி ஆனந்தபரிதமாய் பிரகாசிக்கிறது. துக்கத்தையும், அழுகையையும், தைன்யத்தையும், ஆடம்பரத்தையும், அஹங் தையையும், ஸந்தேகத்தையும், ஸர்வவிதக்லேசங்களையும் கடந்து ஆனந்த ஸாகரத்தில் மூழ்கி மிதந்து விளையாடு கிறது இந்த பரிபூர்ண ஆத்மா என்பதை இக்கவிதையின் ஆனந்த ஸாகரஸ்தவம் என்ற அழகிய பெயரும், அத னுள் துலங்கும் ரத்னங்கள்போன்ற தைவிக ஒளிவீசும் கருத்துக்களும் நன்கு விளக்குகின்றன. இக்கவிதையின் முற்பாதியில் கவி, தான் ஆயுள்முழுவதும் கற்றதும் ஆச ரித்ததும் ஒன்றுக்கும் பிரயோஜனமில்லை என்று நிரூபித்துவிட்டு, தனக்கு தேவியிடம் சரணுகதியே கதி என்று உணர்த்துகிறுர். பின் பாதியில் தேவி ஸ்வரூப

தியான ரூபமான பாதாதி கேசாந்தவர்ணனையும் பற்பலவிதமாகத் தன் ஆத்மார்ப்பணமும் அடங்கி யிருக்கின்றன. ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் தன் மனோ நிலைமையைத் தானே பரீக்ஷித்துத் தெரிந்து கொள்வதற்காக, ஊமத்தஞ் சாரைப்பருகி மயக்கத்தை அடைந்தார். அந்த நிலைமையில், தான் பிதற்றுவதை எழுதி வைக்கும்படி சிஷ்யர்களுக்கு உத்திரவிட்டிருந்தார். அவர் உன்மத்த நிலைமையில் பிதற்றியது உன்மத்த பஞ்சாசத் என்ற ஆத்மார்ப்பண ஸ்துதி. இதில் தன்னையே ஈச்வரனுக்கு அர்ப்பணம்செய்து கொள்ளுகிறார். ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் ஆனந்தஸாகர ஸ்தவத்தில், தேவியிடம் தன்னை ஒப்புவித்து விடுகிறார். இவர் புத்திபூர்வகமாக ஆத்மார்ப்பணம் செய்வதால், சாஸ்திரங்களில் கூறியுள்ள மோக்ஷ ஸாதனங்களை ஆராய்ச்சி செய்து எல்லாம் ஏட்டுச் சுரைக்காய் என்று நிரூபித்து, சரணாகதியே கதி என்று முடிவுசெய்து அதையே அனுஷ்டிக்கிறார்.

கம்பீரமானவையும் சாஸ்திர ரஹஸ்யங்களை ஜீவனாகவுடையவையுமான ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் அவர்களின் வாக்விலாஸங்களுக்கு, இதுவரை அநேகமாய் வியாக்யானங்கள் ஏற்படாததாலும்,உபதேச பரம்பரையில் அவைகள் உலாவி வராததாலும், ஆனந்தஸாகர ஸ்தவத்தில், எனக்கு ஏற்பட்ட ஸம்சயங்களை, நான் திருவானைக் காவலிலிருக்கும் மஹாபண்டிதர், ப்ரும்மஸ்ரீ ராமா சாஸ்திரிகள் அவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொண்டேன், அவர்கள் அன்பு கூர்ந்து எனக்குச் செய்த உதவிக்கு என் க்ருதஜ்ஞதையை விநயத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் அவர்களின் இரு சிறு காவியங்களை மொழி பெயர்க்க என்னைக் கட்டளையிடுவதின் மூலம் ஸ்ரீ ஆசார்யர் அவர்களின் அனுக்ரஹ திருஷ்டிக்கு நான் பாத்திரமானது எனக்கு ஜன்ம ஸாபல்யமென்றே கருதுகிறேன்,

திருவாலங்காடு
6—3—44. }

ய. மஹாலிங்க சாஸ்திரி

சுபமஸ்து

ஸ்ரீ:

ஸ்ரீ குருப்யோ நம:

விஞ்ஞாபனம்

1944வரு பிப்ரவரிமீ 7உயில் வெளிவந்த ஸ்ரீமுக கவியால் பாடப்பட்ட பஞ்சஸதீ என்னும் ஸ்ரீ முக பஞ்சஸதீ புத்தகம் தங்கள் பார்வைக்கு கிடைத்து அதைப் படித்து களித்திருப்பீர்களென்று நம்புகிறோம்.

ஜகன் மாதாவின் கருணையினாலும், ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளின் விசேஷ அநுக்ரஹத்தாலும் ஸ்ரீ ஆநந்தசாகரஸ்தவம் என்ற மதுரமான காவ்யம் இப்போது வெளி வருகிறது. இதில் மஹாகவி ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் அவர்கள் தாம் அனுபவித்த ஆனந்த ரஸத்தை மதுரை ஸ்ரீ மீனாக்ஷி அம்பிகையின்பேரில் பாடிப் போற்றி ஸ்ரீ தேவியின் ப்ரபாவத்தையும், தேவியின் உபாஸநா பலத்தினால் தனக்கு ஸித்தித்த திவ்ய சக்ஷுஸ்ஸின் மஹிமையினால் அடைந்த பெருமையையும், தேச மக்களுக்கு ஸவிஸ்தாரமாக தெரியப்படுத்தினதற்கு நாம் எல்லோரும் அவர்களுக்கு நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

இப் புத்தகத்தை தமிழிலும் ஆங்கிலத்திலும் அனுவாதம் எழுதித் தந்துதவிய ஸ்ரீ. ய. மஹாலிங்க ஶாஸ்திரிகள் அவர்களுக்கும், ஆங்கிலத்தில் முகவுரை எழுதித் தந்துதவிய மதுரை ப்ரபல வக்கீலும் ஜகன்மாதாவான ஸ்ரீ மீனாக்ஷி தேவியின் கைங்கர்யத்துக்கும், ஸனாதன தர்மத்திற்கும் அதிகமாகத் தொண்டுபுரிந்து வருபவருமான தர்மபூஷண, தர்ம ஸம்வர்தக, ப்ரம்மஸ்ரீ N. நடேசய்யர் அவர்களுக்கும், இந்தப் புத்தகத்தின் அட்டையில் அமைந்திருக்கும் ஸ்ரீ மீனாக்ஷிதேவியின் மூவர்ண உருவப் படத்தைத் தயாரித்து உதவிய மதுரை ஆர்ட் ஸ்கூல் ஸூபரின்டெண்டெண்ட் ஸ்ரீ ஸுந்தரமய்யர் அவர்களுக்கும், இதைப் படிக்கும் பக்தரவர்களுக்கும், படிக்கக் கேட்குமவர்களுக்கும் மதுராபுரி ஸ்ரீ மீனாக்ஷி தேவியின் அருள் பரிபூர்ணமாக உண்டாகும்படி பிரார்த்தித்துக் கொள்ளப்படுகிறது.

19-5-44. ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்



ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகள்
ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

॥ श्रीः ॥

॥ आनन्दसागरस्तवः ॥

विज्ञापनार्हविरलावसरानवाप्त्या
मन्दोद्यमे मयि दवीयसि विश्वमातुः ।
अव्याजभूतकरुणापवनापविद्धा-
न्यन्तः स्मराम्यहमपाङ्गतरङ्गितानि ॥ १ ॥

விஜ்ஞாபநார்ஹவிரளாவஸராநவாப்த்யா
மந்தோத்யமே மயி தவீயஸி விஶ்வமாது: ।
அவ்யாஜபூதகருணாபவநாபவித்தா-
ந்யந்த: ஸ்மராம்யஹமபாங்கதரங்கிதாநி ॥ க ॥

विज्ञापनार्हविरलावसरानवाप्त्या = விண்ணப்பம் செய்துகொள்ள ஸௌகர்யமானதும் தனிமையானதுமான ஸந்தர்ப்பம் கிடைக்காததால், मन्दोद्यमे = முயற்சியை விட்டுவிட்ட मयि = நான் दवीयसि = ஒதுங்கியிருந்தபோது विश्वमातुः = ஜகன்மாதாவினுடைய अव्याजभूतकरुणापवनापविद्धानि = தானாகவெழுந்த கருணை என்ற காற்றினால் எழுப்பிக் கிளப்பப்பட்ட अपाङ्गतरङ्गितानि = கடைக்கண் ஒளி வீச்சுகளின் அலைகளை अहं = நான் अन्तः स्मरामि = உள்ளத்தில் தியானம் செய்கிறேன்.

(கருத்துரை) ஜகன்மாதாவின் கருணையால் தூண்டப்பட்டவைபோல கவியின் நினைவுகள் திடீரென்று அவளிடம் தன் பாபங்களைத் தெரிவித்துக்கொள்ள ஸந்நத்தமாயின. இதில் த்வனிக்கும் உவமை யாதெனில், "எப்படி ஒரு பிரபுவைக் காண அவகாசம் கிடைப்பதரிதென மனம் முறிந்து விலகியிருக்கும் ஏழைக்குக் கருணை

மிருந்த அப்பிரபுவின் அழைப்பே எதிர்பாராதவிதமாக ஏற்பட்டுத் தன் விண்ணப்பங்களைத் தெரிவித்துக்கொள்ள செளகர்யம் ஏற்படலாமோ அவ்விதம்'' என்பது.

1. I contemplate on the wave-like succession of glances, impelled by a swift-springing gale of compassion, of the Mother of the Universe, even while I stood at great distance sluggishly despairing of being vouchsafed an opportunity to plead my plight before her.

आवेद्यतामविदितं किमथाप्यनुक्तं
वक्तव्यमान्तररुजोपशमाय नालम् ।
इत्यर्थ्यसे किमपि तच्छ्रवणे निधातुं
मातः प्रसीद मलयध्वजपाण्ड्यकन्ये ॥ २ ॥

ஆவேத்யதாமவிதிதம் கிமதாப்யநுக்தம்
வக்தவ்யமாந்தரருஜோபஶமாய நாலம் ।
இத்யர்த்யஸே கிமபி தச்ச்ரவணே நிதாதும்
மாத: ப்ரஸீத மலயத்வஜபாண்ட்யகந்யே ॥ உ ॥

अविदितम्=நீ அறியாததை आवेद्यतां किम्=நான் சொல்லப்போகிறேனா? अथापि=ஆனாலும் वक्तव्यम्=சொல்லப்பட வேண்டியது अनुक्तम्=சொல்லப்படாவிட்டால் आन्तररुजोपशमाय नालम्=மனதின் புண் ஆறாது. इति=என்ற காரணத்தினால் किमपि तत्=அதைக் கொஞ்சம் श्रवणे निधातुम्=காதில் போட்டுக்கொள்ளும்படி अर्थ्यसे=(நான் உன்னை) பிரார்த்திக்கிறேன். मलयध्वजपाण्ड्यकन्ये=ஹே மலயத்வஜ பாண்டியன் புதல்வியே मातः=அம்மா प्रसीद=நீ தயை புரியவேண்டும்.

(கருத்துரை) ஸகல ஜீவர்களிலும் அந்தர்மியாயிருக்கும் ஜகன்மாதாவுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை என்றாலும் பக்தன் தன் குறைகளைச் சொல்லிக்கொள்வது எதற்கென்றால், தன் மனத்தின் ஆறுதலுக்காகவே. புலம்புதலினால் சோகம் தணியுமல்லவா? ஆகையால் நீ அறிந்ததையே உன்னிடம் சொல்லிக்கொண்டு உன்னைக் கிலேசப்படுத்துவதை ஒரு குற்றமாக எண்ணாதே. என் தாயே, கொஞ்சம் செவிசாய்த்து அருள்புரிவாய்.

2. How can I have anything to say which is not already known to you (in your omniscience)? And yet the urgent thoughts being forcibly shut up will deprive me of the relief which I direly need from their outflow. Daughter of Malayadhvaja Pāṇḍya, my Mother, I therefore request you to give me a hearing:

आक्रन्दितं रुदितमाहतमानने वा
कस्यार्द्रमस्तु हृदयं किमतः फलं वा ।
यस्या मनो द्रवति या जगतां स्वतन्त्रा
तस्यास्तवाम्ब पुरतः कथयामि खेदम् ॥ ३ ॥

ஆக்ரந்திதம் ருதிதமாஹதமாநநே வா
கஸ்யார்த்ரமஸ்து ஹ்ருதயம் கிமத: ஃபலம் வா ।
யஸ்யா மநோ த்ரவதி யா ஜகதாம் ஸ்வதந்த்ரா
தஸ்யாஸ்தவாம்ப புரத: கதயாமி கேதம் ॥ ௩ ॥

आक्रन्दितम्=கதறினேன் रुदितम्=அழுதேன் आनने आहतं वा=முகத்திலும் அடித்துக்கொண்டேன் என்றாலும் कस्य हृदयम्=எவனுடைய மனம் आर्द्रमस्तु=(தயையால்) இளகும்? இளகினாலும் अतः किं वा फलम्=அப்படி என்ன பலன் கிடைக்கப்போகிறது? अम्ब=தாயே यस्याः मनः=எவளுடைய

மனம் द्रवति=உருகுமோ या=எவள் जगताम्=ஜீவராசிகள் விஷயத்தில் स्वतन्त्रा=எதையும் இஷ்டப்படி நடத்தக்கூடிய வளோ तस्याः तव पुरतः=அப்பேர்ப்பட்ட உன் முன்னிலை யில் खेदं कथयामि=என் துக்கத்தைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

(க-ரை) என் துக்கத்தைப் பிறர் யாரிடம் சொல் லிக்கொள்வது? யார் கேட்டுக் இரங்கப்போகிருர்கள்? அப் படி யாராவது இரங்கினுலும் அவர்களால் என் துக்கத்தை நிவர்த்தி செய்ய எப்படி முடியும்? தாயே, ஸகல ஜீவர் களேயும் உன் இஷ்டப்படி நடத்த சக்தியுள்ள உன் முன் என் பரிதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதைத் தவிர வேறு எனக்கு வழி என்ன இருக்கிறது?

3. If I were to cry myself hoarse, lament piteously or slap my mouth in despair in front of another, will that another melt with pity for me? And even if he does, can he help me anyway? I therefore wish to give vent to my sorrow in your presence as you rule the world and are apt to be moved to compassion.

पर्याकुले मनसि वाचि परिस्खलन्त्या-
मावर्तगर्त इव चक्षुषि घूर्णमाने ।
कस्तेऽभिधास्यति शिवे मम तामवस्थां
काले दयस्व कथयामि तवाधुनैव ॥ ४ ॥

பர்யாகுலே மநஸி வாசி பரிஸ்கலந்த்யா-
மாவர்தகர்த இவ சக்ஷுஷி கூர்ணமாநே ।
கஸ்தேऽபிதாஸ்யதி ஶிவே மம தாமவஸ்தாம்
காலே தயஸ்வ கதயாமி தவாதுநைவ ॥ ௪ ॥

शिवे=ஈச்வரி (மங்களத்தையளிப்பவளே) मनसि पर्याकुले=மனம் குழம்புகையிலும் वाचि परिस्खलन्त्याम्=வார்த்தை குளறுகையிலும் चक्षुषि=கண் आवर्तगर्ते इव=சுழல் குழிபோல் घूर्णमाने=சுழலும்போதும் तां मम अवस्थाम्=அத்தகைய என் நிலைமையை ते=உனக்கு कः अभिधास्यति=யார் சொல்லப் போகிறார்? काले अधुनैव=வாய்த்தஸமயத்தில் இப்போதே तव कथयामि=உனக்குச் சொல்லுகிறேன். दयस्व=தயை செய்வாயாக.

(க - ரை) பிராணவியோகமேற்படும் காலத்தில் உன்னிடம் என் நிலைமையைச் சொல்லிக்கொள்ள இந்திரியங்கள் வசத்திலிருக்காது. ஆகையினால் இப்போதே என் எண்ணங்களை வெளியிட உத்தேசித்திருக்கிறேன்.

4. (During the closing moments of life) when my mind will be much disturbed, when the tongue will falter, and when the eyes will whirl as if caught in a vortex, who will be able to describe my condition to you. Oh! Consort of Śiva, I will be-times make my submission to you. Kindly listen.

भक्तिं करोतु नितरां सुरजातिमात्रे
ग्रामीणजन्तुरिव पौरजनेषु लोकः ।
अन्यत्र देवि भवदीयपदारविन्दा-
दाकृष्यमाणमपि मे हृदयं न याति ॥ ५ ॥

ஹக்திம் கரோது நிதராம் ஸுரஜாதிமாத்ரே
க்ராமீணஜந்துரிவ பௌரஜநேஷு லோக: ।
அந்யத்ர தேவி ஹவதீயபதாரவிந்தா-
தாக்ருஷ்யமாணமபி மே ஹ்ருதயம் ந யாதி ॥ ரு ॥

लोकः = உலகத்தவர்கள் ग्रामीणजन्तुः = பட்டிக்காட்டுப் பிராணிகள் पौरजनेषु इव = பட்டிணத்து ஜனங்களைப் பாராட்டுவதுபோல் सुरजातिमात्रे = பொதுவாக தேவ இனத்தைச் சேர்ந்த பற்பல தேவதைகளிடம் नितरां भक्ति करोतु = நிரம்ப பக்தியைச் செலுத்தட்டும். देवि = தேவியே भवदीयपदारविन्दात् = உன் சரண கமலங்களைவிட்டு अन्यत्र = வேறு இடத்தில் मे हृदयम् = என் மனம் आकृष्यमाणमपि = இழுக்கப்படினும் न याति = போகாது.

(க-ரை) உன்னைத்தவிர மற்ற தேவதைகளை ஜனங்கள் நாடுவது பட்டிக்காட்டான் பட்டணத்து மனுஷ்யனைப் பெரியவர்களென்று நினைத்து நாடுவதுபோலவேயாகும். நான் அப்படி ஏமாறுபவனல்ல. உன்னைத்தவிர வேறு தைவத்தை என் மனம் நாடாது.

5. Others may fill themselves with enthusiasm for the galaxy of Divine Beings even as the poor rustic does for the town-bred people; but my Goddess, my heart can never be drawn, even by force, away from the lotus feet of yours.

अङ्गीकुरु त्वमवधीरय वा वयं तु
दासास्तवेति वचसैव जयेम लोकान् ।
एतावतैव सुकरो ननु विश्वमात-
रुद्दण्डदण्डधरकिङ्करमौलिभङ्गः ॥ ६ ॥

அங்கீகுரு த்வமவதீரய வா வயம் து
தாஸாஸ்தவேதி வசஸைவ ஜயேம லோகாந் ।
ஏதாவதைவ ஸுகரோ நநு விச்வமாத-
ருத்தண்டதண்டதரகிங்கரமௌலிபங்க: ॥ ௬ ॥

त्वम् अङ्गीकुरु=நீ ஏற்றுக்கொண்டாலும் சரி அல்லது अवधीरय वा=உதறித்தள்ளினாலும் சரி, वयं तु=நாங்களோ வெனில் तव दासाः=உனது ஊழியர்கள் इति वचसा एव=என்று சொல்லிக்கொண்டே लोकान्=உலகங்களை जयेम=ஜயித்துவிடு வோம். विश्वमातः=ஏ ஜகன்மாதாவே एतावता एव=இத்துடனே उद्दण्डदण्डधरकिङ्करमौलिभङ्गः=கடூரமான யமகிங்கரர்களின் மண்டையை உடைப்பது सुकरः ननु=சுலுவில் ஆகிவிடுமல்லவா.

(க-ரை) ஓ! ஜகன்மாதாவே! நீ எங்களை ஏற்றுக் கொண்டாலும் புறக்கணித்தாலும் உன்னுடைய தாஸன் என்ற வார்த்தையினாலேயே உலகங்களை ஜயித்துவிடுவோம். இத்தகைய எங்களுக்கு யமபடர்கள்தான் எம்மாத்திரம்? (அம்பாளுடைய மஹிமை அவ்வளவு பெருமை வாய்ந்தது.)

6. Whether you accept me or reject me, it matters not. For I will lord it over the world by merely calling myself your slave. This much will do for me to break the heads of the horrible messengers of Death.

वेदान्तवाक्यजनितं विमलं विचारै-
रासाद्य बोधमनुचिन्तनतोऽपरोक्षम् ।
मुक्तिं व्रजन्ति मनुजा इति सूक्तिमाद्या-
मालम्ब्य कस्तरितुमर्हति शैलकन्ये ॥ ७ ॥

வேதாந்தவாக்யஜநிதம் விமலம் விசாரை-
ராஸாத்ய போதமநுசிந்தநதோऽபரோக்ஷம் ।
முக்திம் வ்ரஜந்தி மநுஜா இதி ஸூக்திமாத்யா-
மாலம்ப்ய கஸ்தரிதுமர்ஹதி சைலகந்யே ॥ எ ॥

शैलकन्ये=பர்வதகுமாரியே वेदान्तवाक्यजनितम्=வேதாந்த வாக்கியங்களைக் கேட்பதினால் உண்டானதும் विचारैः

विमलम्=ஆராய்ச்சிகளால் தெளிந்ததும் अनुचिन्तनतः अपरोक्षम्=இடைவிடாமல் தியானம் மனனம் செய்வதால் நேரில் ஏற்படுகின்றதுமான बोधम् आसाद्य=(ஆத்ம) ஞானத்தை அடைந்து मनुजाः मुक्तिं व्रजन्ति=மனிதர்கள் முக்தி அடைகிறார்கள். इति आद्यां सूक्तिम्=என்ற முதன்மையான வசனத்தை (வேதமொழியை) आलम्ब्य=கைபிடித்துக்கொண்டு (ஆதாரமாகக்கொண்டு) कः=எவன் तरितुम्=கரையேற अर्हति=தகுந்தவனாவான்.

(க-ரை) ஞானமார்க்கத்தைப் படிப்படியாக ஆச்ரயித்து மோக்ஷம் பெறுவதெனில் அஸாத்தியமான காரியமே. உபநிஷத் வாக்கியங்களைக் கற்றறிந்து அவைகளின் தாத்பர்யத்தை ஆராய்ந்து மனனம் செய்வதால் ஞானோதயம் உண்டாகிறது. அந்த ஞானத்தின் மூலம் முக்தியடையலாம் என்ற வேதாந்தக்கொள்கையெல்லாம் எழுத்தில் வாசிக்கலாமே ஒழிய அனுஷ்டானத்தில் கடினமாதலால் யாருக்குப் பயன்படப்போகின்றது?

7. Daughter of the Hills, scarcely any, as a matter of fact, can get over misery by depending upon the declaration of the revealed utterances that men attain salvation through real knowledge proceeding from a study of Vedānta, chastened by sharp enquiry and assimilated by deep contemplation.

एकैकवेदविषयाः कति नाम शाखा-
स्तासां शिरांसि कति नाम पृथग्विधानि ।
अर्थावबोधविधुरोऽक्षरलाभ एव
केषां नृणां कतिभिरस्तु शरीरबन्धैः ॥ ८ ॥

ஏகைகவேதவிஷயா: கதி நாம ஶாகா-
ஸ்தாஸாம் ஶிராம்ஸி கதி நாம ப்ருதக்விதானி ।
அர்த்தாவபோதவிதுரோऽக்ஷரலாப ஏவ
கேஷாம் ந்ருணாம் கதிபிரஸ்து ஶரீரபந்தை: ॥ ௮ ॥

एकैकवेदविषयाः शाखाः = ஒவ்வொரு வேத ஸம்பந்தமான கிளைகள், कति नाम = எவ்வளவு? तासां पृथग्विधानि शिरांसि = அக்கிளைகளுக்குத் தனித்தனியான உபநிஷத்துக்கள் कति नाम = எத்தனை? अर्थावबोधविधुरः = அர்த்தஜ்ஞானமில்லாத, अक्षरलाभः एव = அக்ஷரங்களை அப்யஸிப்பது மட்டும் केषां नृणाम् = எவ்வளவு பேர்களுக்கு कतिभिः शरीरबन्धैः = எத்தனை ஜன்மங்களில் अस्तु = ஏற்படலாம்?

[க - ரை) வேதங்கள் நான்கு. ஒவ்வொரு வேதத்திற்கும் கிளைகள் பல. அந்த அந்தக் கிளைகளுக்குத் தனித்தனியான உபநிஷத்துக்கள். இவைகளையெல்லாம் அர்த்தம் தெரிந்துகொள்ளாமல் அத்யயனம் மட்டும் செய்வதற்கே பல ஜன்மங்கள் வேண்டும். அப்படி அத்யயனம் செய்யக்கூடியவனும் கோடிக்கு ஒருவன் இருக்கலாம்.

8. Innumerable are the branches of the several Vedas, and those branches have their own innumerable Upaniṣads severally. How many births will one have to pass through, before one learns the texts alone leaving out of consideration a knowledge of their meaning.

न्यायाः परस्परविभिन्नदिशः सहस्र-
मुच्चावचानि च भवन्त्युपबृंहणानि ।

एवं स्थिते गिरिसुते निगमोपलानां
तात्पर्यसारमवधारयितुं क्षमः कः ॥ ९ ॥

ந்யாயா: பரஸ்பரவிபிந்நதிஶ: ஸஹஸ்ர-
முச்சாவசாநி ச பவந்த்யுபப்ரும்ஹணாநி ।
ஏவம் ஸ்திதே கிரிஸுதே நிகமோபலாநாம்
தாத்பர்யஸாரமவதாரயிதும் க்ஷம: க: ॥ ௯ ॥

परस्परविभिन्नदिशः = ஒன்றுக்கொன்று மாறுபாடான போக்குள்ள न्यायाः सहस्रम् = மீமாம்ஸா நியாயங்கள் ஆயிரம். उपबृंहणानि च = அவைகளின் வியாக்கியானம் முதலிய விஸ்தாரங்களோ उच्चावचानि भवन्ति = பலவிதமாயிருக்கின்றன. गिरिसुते = பர்வதகுமாரியே एवं स्थिते = இவ்விதமிருக்கையில் निगमोपलानाम् = வேதங்களாகிற கற்களின் तात्पर्यसारम् = உண்மையான உட்கருத்தை (சிறப்பை) अवधारयितुम् = நிர்ணயிப்பதற்கு कः क्षमः = எவன் திறமையுள்ளவன்?

(க - ரை) வேதார்த்தங்களை விளக்கக்கூடிய சாஸ்திரங்களோ மஹர்ஷிகளின் மனம்போன போக்காய் ஏற்பட்டிருக்கின்றன. ஒருவர் சொன்னபடி ஒருவர் சொல்வதில்லை. அந்த மஹர்ஷிகளின் ஸித்தாந்தங்களை விவரிக்கும் நூல்களோ பலவிதமாயிருக்கின்றன. பின் வந்த மேதாவிகளோ, குவியல் குவியலாய்ப் புஸ்தகங்களை எழுதி ஒன்றும் புரியாமல் அடித்துவிட்டார்கள். இந்த நிலைமையில் வேதங்களின் உண்மையான கருத்தை எப்படி அறிந்து எதை அநுஷ்டித்து எந்த விதமாய் கரையேறுகிறது?

9. The philosophical schools are many and mutually contradicting. And the commentaries pertaining to them have grown immensely vast. In this state of

things, Oh Daughter of the Hills, who is competent to ascertain the essential purport of the unyielding Vedic lore?

अस्त्वक्षरग्रहविधिर्जनुषां सहस्रै-
राषाततो भवतु वापि ततोऽर्थबोधः ।
दुर्वादिकल्पितविकल्पतरङ्गसान्द्रान्
दुष्पूर्वपक्षजलधीन् कथमुत्तरेयुः ॥ १० ॥

அஸ்த்வக்ஷரக்ரஹவிதிர்ஜநுஷாம் ஸஹஸ்ரை-
ராபாததோ ஹவது வாபி ததோऽர்த்தபோத: ।
து³ர்வாதிகல்பிதவிகல்பதரங்கஸாந்த்ராந்
து³ஷ்பூர்வபக்ஷஜலதீந் கதமுத்தரேயு: ॥ ௰ ॥

जनुषां सहस्रैः = ஆயிரம் ஜன்மங்கள் எடுத்து अक्षरग्रहविधिः = அக்ஷரஞானம் ஸம்பாதித்துக்கொள்வதாய் अस्तु = வைத்துக்கொள்வோம். ततः = பின்பு (பல ஜன்மங்களில்) अर्थबोधः अपि = அர்த்தஞானமும் आपाततः भवतु वा = (மேலெழுந்ததாக—ஆழ்ந்ததல்லாமல்) ஒருவாறு ஏற்படுவதாய் வைத்துக்கொள்வோம். दुर्वादिकल्पितविकल्पतरङ्गसान्द्रान् = குதர்க்கம் செய்பவர்களால் பரப்பப்பட்ட குயுக்திகளாகிற அலைகள் நிரம்பிய दुष्पूर्वपक्षजलधीन् = துர்கக்ஷிகளாகிற சமுத்திரங்களை कथम् उत्तरेयुः = எப்படி தாண்டுவார்கள்.

(க - ரை) ஒரு மனுஷ்யனுக்கு வித்யை வரவேண்டுமானல் பல ஜன்மங்களின் வாஸனுபலம் வேண்டியிருக்கிறது. அவன் தத்வவிசாரத்திற்குத் தொடங்கும்போது பல துர்மதக்காரர்களின் துர்கக்ஷிகளையெல்லாம் எதிர்த்துப் போராடவேண்டி வருகிறது. இல்லையேல், அவை அவன் ஆராய்ச்சியைக் கெடுத்துவிடுகின்றன. (ஸித்தாந்தார்த்தத்தை அறிவது சிரமமென்பது கருத்து.)

10. Let us suppose that in thousands of births one masters the Vedic texts and in the course of many others informs himself of their general purport. Even then one will be confronted by the oceans of the perverted philosophical theories impassable with the surging billows of idle contentions raised by wicked opponents of Truth.

ब्रह्मेति शक्तिरिति बन्धविमोचनीति
मायामयीति मदनान्तकवल्लभेति ।
सप्ताष्टशब्दपरिवर्तनमात्र एव
सामर्थ्यमावहति शास्त्रपरिश्रमोऽयम् ॥ ११ ॥

ப்ரஹ்மேதி ஶக்திரிதி பந்தவிமோசநீதி
மாயாமயீதி மதநாந்தகவல்லபேதி ।
ஸப்தாஷ்டஶப்தபரிவர்தனமாத்ர ஏவ
ஸாமர்த்யமாவஹதி ஶாஸ்த்ரபரிஶ்ரமோ஽யம் ॥

ब्रह्म इति=பிரம்மம் என்றும் शक्तिः इति=சக்தி என்றும் बन्धविमोचनी इति=(பவபந்தத்தை) விடுவிப்பவள் என்றும் मायामयी इति=மாயா ரூபிணீ என்றும் मदनान्तकवल्लभा इति=காமனை எரித்த பரமசிவனின் அன்பிற்குரியவள் என்றும் सप्ताष्टशब्दपरिवर्तनमात्रे एव=ஏழு எட்டு வார்த்தைகளைத் திரும்பத் திரும்ப மாற்றி உச்சரிப்பதில் மட்டுமே अयं=இந்த शास्त्रपरिश्रमः=சாஸ்திரப்பயிற்சி सामर्थ्यम् आवहति=திறமையை உண்டுபண்ணுகிறது.

(க-ரை) சாஸ்திரபாண்டித்யம் ஏற்பட்டாலும் ஆடம்பரமாக பிரம்மம், சக்தி, பந்தம், மாயை இந்த மாதிரியான விஷயங்களைப்பற்றிப் புரட்டி புரட்டிப் பேச

லாமேயொழிய நற்கதிக்குக் காரணமான உண்மையறிவு அநுபவத்தில் ஏற்படுவதில்லை.

11. After all, even sound learning in the "Śāstras" can but impart to one scarcely little more than the cleverness in bandying a few high sounding words like, Brahman, Śakti, Bandhavimochanī, (the releaser from bonds) Māyāmayī (the genius of illusion) Madanāntaka-Vallabhā (the consort of the destroyer of Cupid) etc.

तस्मै प्रसीदसि गिरीन्द्रसुते य इत्थं
संपादयेत शनकैरपरोक्षबोधम् ।
यस्मै प्रसीदसि स च क्षमतेऽवबोद्धु-
मित्थं परस्परसमाश्रयमेतदास्ते ॥ १२ ॥

தஸ்மை ப்ரஸீதஸி கிரீந்த்ரஸுதே ய இத்தம்
ஸம்பாதயேத ஶநகைரபரோக்ஷபோதம் ।
யஸ்மை ப்ரஸீதஸி ஸ ச க்ஷமதேऽவபோத்தும்
இத்தம் பரஸ்பரஸமாஶ்ரயமேததாஸ்தே ॥ கஉ ॥

गिरीन्द्रसुते=பர்வதராஜன் புதல்வியே इत्थम्=இவ்விதமாக यः=எவன் शनकैः=சிறுகச்சிறுக अपरोक्षबोधम्=(அபரோக்ஷமான அறிவை) ஆத்மாநுபவத்தை संपादयेत=சம்பாதிக்கிறானோ तस्मै=அவன் பொருட்டு प्रसीदसि=நீ தயை செய்கிறாய். यस्मै=எவன் பொருட்டு प्रसीदसि=தயை செய்கிறாயோ स च=அவனே अवबोद्धुं क्षमते=அபரோக்ஷ ஞானத்தைப் பெறக்கூடியவனாகிறான். एतत्=இந்த விஷயம் इत्थम्=இவ்விதமாக परस्परसमाश्रयम्=ஒன்றோடு ஒன்று பற்றியதாக आस्ते=இருக்கிறது.

(க - ரை) உன் அருள் இருந்தால் ஞானியாவான். ஞானியானால் நீ அருள் புரிவாய். இப்படி பரஸ்பர

ஆச்ரயமாக இருந்தால் போகும் வழி எப்படி? (பரஸ்பராச்ரயம் (அந்யோந்யாச்ரயம்) என்னும் தோஷமாம்.)

12. Daughter of the Lord of Mountains, you vouchsafe your grace to him who attains by constant effort the illuminating knowledge of the self. And none can hope to attain that knowledge who is not blessed with your grace. This inter-dependance of the two perplexes us.

आकर्णय त्वमिममभ्युपगम्यवादं
जानातु कोऽपि यदि वा हृदयं श्रुतीनाम् ।
तस्याप्यसंख्यभवबन्धशतार्जितोऽयं
द्वैतभ्रमो गलतु जन्मशतैः कियद्भिः ॥ १२ ॥

ஆகர்ணய த்வமிமமப்யுபகம்யவாதம்
ஜாநாது கோऽபி யதி வா ஹ்ருதயம் ச்ருதீநாம் ।
தஸ்யாப்யஸங்க்யபவபந்தசதார்ஜிதோऽயம்
த்வைதப்ரமோ கலது ஜந்மசதை: கியத்பி: ॥ கஉ ॥

इमम्=இந்த अभ्युपगम्यवादम्=ஒப்புக்கொண்டு பேசும் கக்ஷியை त्वम् आकर्णय=நீ கேள். श्रुतीनाम्=வேதங்களுடைய हृदयम्=அந்தரங்கத்தை कोऽपि=ஒருவன் यदि वा जानातु=அறிகிறான் என்று வைத்துக்கொள்வோம். तस्यापि அவனுக்குக்கூட अयम्=இந்த असंख्यभवबन्धशतार्जितः=எண்ணிறந்த ஜன்மங்களின் பலவிதமான பற்றுக்களால் ஏற்பட்ட द्वैतभ्रमः=இரண்டென்ற (உண்மையில்லாத) தோற்றம் कियद्भिः जन्मशतैः=எவ்வளவு ஜன்ம ஜன்மங்களில் गलतु=தொலையும் (விலகும்).

(க - ரை) வேதாந்த விசாரம் செய்து தத்துவார்த்தங்களை ஒருவன் தெரிந்துகொண்டுவிட்டதாகவே வைத்துக்கொள்வோம். அத்வைத அனுபவம் வருவது அரிது. கோடி ஜன்மங்களில் ஏறிய த்வைத வாஸனை இலகுவில் அழிந்துபோகுமா?

13. Or let me speak on the assumption that some one succeeds in precisely understanding the message of the Vedic lore. Even in this case it is unlikely that hundreds of birth will wash off the illusion of two—foldness, sticking fast to his soul through manifold attachments contracted in innumerable past lives.

काले महत्यनवधावपतन् कदापि
क्वाप्यन्तिमे जनुषि कोऽपि गतिं लभेत ।
इत्थं समर्थनविधिः परमागमानां
पर्यायसूक्तिविधया नयनं नञर्थे ॥ १४ ॥

காலே மஹத்யநவயாவபதந் கதாபி
க்வாப்யந்திமே ஜநுஷி கோऽபி கதிம் லபேத ।
இத்யம் ஸமர்யனவியி: பரமாகமாநாம்
பர்யாயஸூக்திவியயா நயநம் நஞர்யே ॥ கச ॥

महति अनवधौ काले=முடிவில்லாத நீண்ட காலத்தில் कदापि=ஒரு சமயத்திலும் अपतन्=கீழே விழாமல் இருந்து (நல்வழி தவருமல்) अन्तिमे=கடைசியான कापि जनुषि=ஏதோ ஒரு ஜன்மத்தில் कोऽपि=எவனே ஒருவன் गतिं लभेत=நல்ல கதியை அடைவான். इत्थम्=என்று இவ்விதம் आगमानाम्=சாஸ்திரங்களுக்கு समर्थनविधिः=கருத்தை விளக்கும் வழி. परम्=உண்மையில் पर्यायसूक्तिविधया=வேறு வார்த்தைகளால் சொல்லும் மாதிரியில் नञर्थे=இல்லை

என்ற பொருளில் **नयनम्**=ஸூசனை செய்வதேயாகும். (கொண்டுபோய் விடுவதேயாகும்.)

(க - ரை) எல்லையற்ற கால அளவில் யாரோ ஒருவன் எந்த ஜன்மத்திலும் தன்னைக் கீழே வீழ்த்தக்கூடிய (பந்தகரமான) பிரவிருத்திகளில் சிக்கிக்கொள்ளாமல் எப்போதுமே மேல்கதி யடைய பிரயத்தனம் செய்து கொண்டே இருப்பானாகில் அவன் எவ்வளவோ ஜன்மாக்களுக்குப்பிறகு மோக்ஷமடைவான் என்று சாஸ்திரங்களின் தாத்பர்யம் என்பதைச் சுருக்கிச் சொல்லுங்கால் ஒருவராலும் இது ஸாத்தியமாகாது என்றே சொல்லிவிடுவது மேல்.

14. If you interpret the Sāstras to mean that some one in the limitless expanse of time taking precaution that he never falls (from the strictest standard prescribed for salvation-seekers) attains bliss at the very last of an almost interminable series of births, then it is as good as saying that it is practically impossible for any one to attain that Bliss.

एकापवर्गसमये जगतोऽपवर्गः
सर्वापवर्गसमये पुनरस्तशङ्कः ।
ईदृग्विधं कमपि पक्षमिहावलम्ब्य
स्थातुं सुखं क्षममनेन पथा प्रवृत्तैः ॥ १५ ॥

ஏகாபவர்கஸமயே ஜகதோऽபவர்க:
ஸர்வாபவர்கஸமயே புநரஸ்தஶங்க: ।
ஈத்ருக்விதம் கமபி பக்ஷமிஹாவலம்ப்ய
ஸ்தாதும் ஸுகம் க்ஷமமநேந பதா ப்ரவ்ருத்தை: ॥

एकापवर्गसमये=ஒரு ஜீவன் மோக்ஷம் அடையும் காலத்தில் जगतः=உலகத்திற்கே अपवर्गः=மோக்ஷம் सर्वापवर्गसमये पुनः=எல்லா ஜீவன்களுக்கும் மோக்ஷம் ஏற்படும் காலத்திலோ अस्तशङ्कः=(சந்தேகமில்லாதது) நிச்சயமாக உண்டு. ईदृग्विधम्=என்ற இவ்விதமாக कमपि पक्षम्=ஒரு கொள்கையை इह=இங்கு अवलम्ब्य=கைபிடித்து अनेन पथा=மேற்கூறிய வழியில் प्रवृत्तैः=இறங்கினவர்கள் सुखं स्थातुं क्षमम्=கவலையற்று இருந்துவிடலாம்.

(க - ரை) மேற்கூறிய வழியில் செல்வதைவிட நம் இஷ்டம்போல் இருந்துகொண்டாலுமே மோக்ஷமடையலாமே. ஏனெனில் சில மேதாவிகள் (ஏக ஜீவவாதிகள்) ஒரு ஜீவன் மோக்ஷத்திற்கு அதிகாரியாகி விட்டால் எல்லா ஜீவர்களும் அவருடனே முக்தியளிக்கப்படுகிறார்கள் என்றும் வேறு சில மேதாவிகள் (நாநாஜீவவாதிகள்) ஈச்வரன் இந்த லீலா பிரபஞ்சத்தை ஸம்ஹரிக்கும்போது எல்லா ஜீவர்களுக்கும் யாதொரு வித்தியாசமின்றி மோக்ஷமளிக்கிறார் என்றும் அபிப்ராயப் படுகிறார்கள் அன்றோ! எப்படியும், தானே மோக்ஷம், கிடைக்கிறது; சாஸ்திரங்களில் கூறிய சிரமமானதும், இலகுவில் பலனைத் தராததுமான வழியில் ஏன் இறங்க வேண்டும்?

15. Those who commit themselves, to this course might as well repose at ease trusting to some such theory as that the whole universe of beings attains salvation when the one primary being is admitted to it or that God releases all beings for admission to eternal bliss at an appointed period.

अभ्यस्य वेदमवधाय च पूर्वतन्त्र-
मालक्ष्य शिष्टचरितानि पृथग्विधानि ।
अध्यापनादिभिरवाप्य धनं च भूरि
कर्माणि मातरलसाः कथमाचरेयुः ॥ १६ ॥

அப்⁴யஸ்ய வேத³மவதா⁴ய ச பூர்வதந்த்ர-
மாலக்ஷ்ய ஶிஷ்டசரிதாநி ப்ருத²க்³விதா⁴நி ।
அத்⁴யாபநாதி³பி⁴ரவாப்ய த⁴நம் ச பூ⁴ரி
கர்மாணி மாதரலஸா: கத²மாசரேயு: ॥ ௧௬ ॥

मातः=தாயே! वेदम्=வேதத்தை अभ्यस्य=அப்யஸித்து पूर्वतन्त्रम् अवधाय च=பூர்வ மீமாம்ஸா சாஸ்திரத்தையும் கற்று पृथग्विधानि=பற்பல மாதிரியான शिष्टचरितानि=பெரியோர்களின் ஆசரணைகளையும் आलक्ष्य च=கவனித்துத் தெரிந்துகொண்டு अध्यापनादिभिः=வேத சாஸ்திரம் கற்பித்தல் முதலிய வழிகளால் भूरि धनं च=மிகுந்த திரவியத்தையும் अवाप्य=அடைந்து अलसाः=சோம்பேறிகளாக ஆனவர்கள் कर्माणि=கர்மாக்களை कथम् आचरेयुः எப்படிச் செய்வார்கள்.

(க - ரை) சாஸ்திர விற்பத்தி மோக்ஷத்திற்கு ஸாதகமாக ஆகாதது மட்டுமல்ல; ஸ்வர்க்கத்தைக் கொடுக்கக் கூடிய கர்மாக்களை அனுஷ்டிப்பதற்குக்கூட சிரத்தையை உண்டுபண்ணத் தகாததாகின்றது. ஏனெனில் பண்டிதர்கள் கற்பதிலும் கற்பிப்பதிலும், திரவியம் தேடுவதிலும் பிரயாஸைப்பட்டுவிட்டு இறுதியில் கர்மாக்களைச் செய்யவேண்டியபோது சோம்பேறிகளாகின்றனர்.

16. Mother, it is impossible to expect men to devote themselves to Karma who after studying the Vedas, closely examining the Mīmāṁsā Śāstra and

carefully observing the conflicting precedents of the "Śiṣṭas" (men whose conduct is an example for others) earn plenty of wealth through teaching and other kinds of exertions and in the end grow lazy.

आयस्य तावदपि कर्म करोतु कश्चि-
त्तेनापि मातरधिकं किमिहानुभाव्यम् ।
आस्ते सुखं य इह भारतवर्षसीम-
न्यास्ते स किञ्चिदित उत्तरतोऽपसृत्य ॥ १७ ॥

ஆயஸ்ய தாவதபி கர்ம கரோது கஶ்சித்
தேநாபி மாதரதிகம் கிமிஹாநுபாவ்யம் ।
ஆஸ்தே ஸுகம் ய இஹ பாரதவர்ஷஸீம-
ந்யாஸ்தே ஸ கிஞ்சிதித உத்தரதோऽபஸ்ருத்ய ॥ கஎ ॥

कश्चित्=ஒருவன் आयस्य अपि=சிரமப்பட்டும் कर्म=கர்மாவை करोतु तावत्=செய்வதாய் வைத்துக்கொள்வோம். मातः=தாயே! तेनापि=அவனுல்கூட इह=இங்கு अधिकम्=அதிகமாக किम् अनुभाव्यम्=எது அனுபவிக்கத் தகுந்தது? इह भारतवर्षसीमनि=இந்த பாரத பூமியில் यः सुखम् आस्ते=எவன் ஸுகமாக இருக்கிறுனே सः=அவனே इतः किञ्चित्=இதற்குக் கொஞ்சம் उत्तरतः अपसृत्य=வடக்கே போய் आस्ते=(ஸுகமாய்) இருக்கிறுன்.

(க - ரை) ஒருவன் தன்னை மிக்க சிரமத்திற்கு உட்படுத்திக்கொண்டு விதிக்கப்பட்ட யஜ்ஞம் முதலிய கர்மாக்களை முறைப்படி அனுஷ்டிப்பதாய் வைத்துக்கொண்டாலும் அவன் இப்புவியில் அநுபவிக்கும் ஸ்திரீ ஸுகம் முதலிய சிற்றின்பங்களையே ஸ்வர்க்கத்திலும் போய் அனுபவிக்கிறுன். இதில் என்ன விசேஷம்? இங்கேயே

சிரமப்படாமல் ஸுகங்களை அனுபவித்துக்கொண்டிருக்கலாமே.

குறிப்பு:—ஸ்வர்க்கம் வடக்கே மேருவில் இருப்பதாய்ச் சொல்லப்படுகிறது.

17. But, Mother, supposing one strains himself to observe Karma, what special happiness does that one get as reward for his pains. He who was happy while he lived in this Bhārata Varṣa, now goes a little north and is happy in the same manner. [Svarga is north of Bhāratha Varṣa being situate on Meru and the pleasures of Svarga are not different in kind from those of the Earth.]

कर्म त्यजेम यदि नूनमधः पतेम
यद्याचरेम न कदापि भवं तरेम ।
कर्म त्यजेदिति चरेदिति च प्रवृत्ता
भावेन केन निगमा इति न प्रतीमः ॥ १८ ॥

கர்ம த்யஜேம யதி நூநமத: பதேம
யத்யாசரேம ந கதாபி பவம் தரேம ।
கர்ம த்யஜேதிதி சரேதிதி ச ப்ரவ்ருத்தா
பாவேந கேந நிகமா இதி ந ப்ரதீம: ॥ கஅ ॥

कर्म यदि त्यजेम=கர்மாவை விடுவோமானால் नूनम् अधः पतेम=நிச்சயமாய்க் கீழே விழுந்துவிடுவோம். यदि आचरेम=செய்வோமானால் भवम्=பிறவி(க்கடலை)யை न कदापि तरेम=ஒருபோதும் தாண்டமாட்டோம். कर्म त्यजेत् इति=கர்மாவை விடு என்றும் चरेत् इति च=செய் என்றும் प्रवृत्ताः உபதேசிக்கும் निगमाः=வேதங்கள் केन भावेन=என்ன அபிப்பிராயத்

துடன் (प्रवृत्ताः) इति=உபதேசிக்கின்றன என்று न प्रतीमः= நமக்குப் புரியவில்லை.

(க - ரை) வேதங்கள் கர்மமார்க்கத்தையும் ஞான மார்க்கத்தையும் உபதேசிக்கின்றன. கர்மாவைவிட்டால் நரகத்திற்குப் போகவேண்டும் என்றும் கர்மாவைச் செய்தால் மறுபடி கர்மபலங்களை அனுபவிக்க ஜன்மங்கள் எடுக்கவேண்டும் என்றும் கர்மா ஞானமார்க்கத்திற்கு இடையூறுகின்றது என்றும் கூறுகின்றன. இதனால் கர்மாவை விடுவது சாஸ்திர சம்மதமா? செய்வது சாஸ்திர சம்மதமா? என்பது புரியவில்லை.

18. The authoritative texts declare that if we give up Karma there is no redemption for us. They also say that doing Karma we can never cross this "Saṁsāra". We are at a loss to see what they mean really, when they in the same breath both advocate and deprecate Karma.

कर्मण्यकर्मविधिरेष यदाचरन्ति
कर्माणि तत्तदनुबन्धजिहासयेति ।
सत्यं तथाप्यभिनवो भविता न बन्धः
प्राचीनबन्धहरणे क इवाभ्युपायः ॥ १९ ॥

கர்மண்யகர்மவிதிரேஷ யதாசரந்தி
கர்மாணி தத்ததநுபந்தஜிஹாஸயேதி ।
ஸத்யம் ததாப்யபிநவோ பவிதா ந பந்த:
ப்ராசீநபந்தஹரணே க இவாப்யுபாய: ॥ கக ॥

कर्माणि=கர்மாக்களை तत्तदनुबन्धजिहासया=அவ்வவை களின் பலன்களில் பற்றில்லாமல் यत् आचरन्ति=செய்வார்

களேயானுல் एषः=இதுவே कर्मणि=கர்மமார்க்கத்தில் अकर्मविधिः=கர்மத்தொடர்பில்லாத வழி इति सत्यम्=என்பது உண்மை. तथापि=ஆனுலும் अभिनवः=புதிதாக बन्धः=கர்மபந்தம் न भविता=ஏற்படப்போவதில்லை. प्राचीनबन्धहरणे=முன்செய்த கர்மபலன்களை ஒழிப்பதற்கு अभ्युपायः=உபாயம் कः इव=என்னவோ (ஒன்றுமில்லை).

(க - ரை) ஆனுல் கர்மாக்களை காம்யமாக இல்லாமல் நிஷ்காமமாக (பயன்களை விரும்பாமல்) செய்தால் அவைகளின் மூலம் மறுபிறப்பு ஏற்பட ஹேதுவில்லை என்ருலும் பூர்வ கர்மாக்களின் பலனுக ஏற்படக்கூடிய மறுபிறப்பு முதலிய பலன்களை எப்படித் தடுப்பது?

19. It is true that in the path of action, actions done with avowed renunciation of their fruits, are as good as non-action. Indeed, fresh bonds will not be contracted through them: but by what means are we to get rid of those already holding us tight around?

प्रारब्धकर्म कियदारभते कियद्वा
प्रारप्स्यते कियदिदं क इवावधत्ताम् ।
कालः कियानिव मया प्रतिपालनीयो
यस्य क्षणार्धमपि कल्पशतत्वमेति ॥ २० ॥

ப்ராரப்தகர்ம கியதாரபதே கியத்வா
ப்ராரப்ஸ்யதே கியதிதம் க இவாவதத்தாம் ।
கால: கியாநிவ மயா ப்ரதிபாலநீயோ
யஸ்ய க்ஷணார்தமபி கல்பஶதத்வமேதி ॥ உ0 ॥

प्रारब्धकर्म=முன்னிழைத்த வினைப்பயன் कियत्=எவ்வளவு कियत् वा आरभते=அதில் எத்தனை பலன் கொடுக்கத்

துவக்கியிருக்கின்றன. कियत् इदम् प्रारप्स्यते=இது பின்னும் எவ்வளவு பலன் கொடுக்கத் துவக்கப்போகிறது என்று क इव=எவன்தான் अवधत्ताम्=தீர்மானமாக அறிய முடியும்? यस्य (मम)=எந்த எனக்கு क्षणार्धमपि=அரைக் கணமும், कल्पशतत्वमेति=நூறு கல்பங்களாகிறதோ (तेन) मया=அந்த என்னால் कियानिव कालः=எவ்வளவு காலம் प्रतिपालनीयः= காத்திருக்க முடியும்.

(க - ரை) பூர்வகர்மாவைப்பற்றி இந்த ஜன்மத்தில் ஒன்றுமே தெரிகிறதில்லை. அத்தகைய கர்மா இன்னும் எவ்வளவு ஜன்மங்களில் பலன் கொடுக்கக்கூடியவையாக இருக்கின்றனவோ? இந்த ஜன்மத்திலேயே முக்தியடையவேண்டுமென்று பரபரப்பு ஏற்பட்ட எனக்கு ஒரு க்ஷணம் காத்திருப்பது பல யுகங்களாகவல்லவா தோன்றுகிறது.

20. There is no means of knowing how much antecedent Karma has accumulated for me, how much of it has begun to hold sway over me and how much of it will in the future begin to do the same. If I should on their account be called upon to wait long, I cannot endure the delay as every fraction of a minute to me is now as tedious as a hundred kalpas.

पुंसः क्षणार्धमपि संसरणाक्षमस्य
सांख्यादयः सरणयो न विशन्ति कर्णम् ।
संख्याय गाङ्गसिकताः सकलाश्च सूक्ष्मा
भुङ्क्ष्वेति वागिव महाक्षुधयार्दितस्य ॥ २१ ॥

பும்ஸ: க்ஷணார்த்தமபி ஸம்ஸரணாக்ஷமஸ்ய
ஸாங்க்யாதய: ஸரணயோ ந விஶந்தி கர்ணம் ।

ஸங்க்ஹ்யாய ஜாங்ஹவிகதாஸ்ஸகலாஶ்ச ஸூக்ஷ்மா
ஶுங்க்ஷ்வேதி வாகிவ மஹாக்ஷுதயார்திதஸ்ய ॥

क्षणार्धमपि = அரைக்கணமும் संसरणाक्षमस्य = பிறவிச் சுழலில் உழல ஸகிக்காத पुंसः = ஒரு மனிதனுக்கு सांख्यादयः = ஸாங்கியம் முதலிய सरणयः = மதங்கள். (வழிகள்) महाक्षुधया अर्दितस्य = பெரும் பசியால் வருந்துபவனுக்கு सूक्ष्माः गाङ्गसिकताः सकलाश्च = சிறிய கங்கை மணல்களை முற்றிலும் संख्याय = எண்ணிக் கணக்கிட்டபிறகு भुङ्क्ष्व इति = சாப்பிடு என்ற वागिव = வார்த்தைபோல் कर्णं न विशन्ति = காதில் நுழைகிறதில்லை.

(க - ரை) இவ்விதப் பரபரப்பு ஏற்பட்டவனுக்கு முக்தியடைய உபாயமாக ஸாங்க்யம் முதலிய மதங்களை உபதேசிப்பது, மிக்கப் பசியால் வருந்துபவனுக்கு கங்கையின் மணல் மேடுகளில் உள்ள எல்லா மணல்களையும் எண்ணிக் கணக்குப் பண்ணிவிட்டு ஆகாரம் செய் என்று உத்திரவிடுவதுபோல் இருக்கிறது.

21. For one who even for a fraction of a minute can have no patience with "*Saṁsāra*" the SĀṄKHYA and other courses are as absurd to listen to, as the direction to a person writhing with gnawing hunger that he shall sit for his repast after counting the minutest sands of the Ganges.

भक्तिस्तु का यदि भवेद्रतिभावभेद-
स्तत्केवलान्वयितया विफलैव भक्तिः ।
प्रीतिस्त्वयि त्रिजगदात्मनि कस्य नास्ति
स्वात्मद्रुहो न खलु सन्ति जनास्त्रिलोक्याम् ॥ २२ ॥

ஹக்திஸ்து கா யதி ஹவேத் ரதிஹாவஹேத-
ஸ்தத்கேவலாந்வயிதயா விஹலைவ ஹக்தி: ।
ப்ரீதிஸ்த்வயி த்ரிஜகதாத்மநி கஸ்ய நாஸ்தி
ஸ்வாத்மத்ருஹோ ந வலு ஸந்தி ஜநாஸ்த்ரிலோக்யாம் ॥

भक्तिः तु का=பக்தி என்பது என்ன? रतिभावभेदः=அன்பின் ஒரு வகையாக यदि भवेत्=ஆகும் என்றால் तत्=அது केवलान्वयितया=இல்லாத இடம் கிடையாது ஆகையால் भक्तिः=பக்தி என்பது विफलैव=பயனற்றதே. त्रिजगदात्मनि त्वयि=மூன்று லோகத்திலும் உள்புகுந்திருக்கும் (ஆன்மாவாக விளங்கும்) உன்னிடம் कस्य=எவனுக்கு प्रीतिः=அன்பு नास्ति=இல்லை. त्रिलोक्याम्=லோகம் மூன்றிலும் स्वात्मद्रुहः=தன்னை வெறுப்பவர்களான जनाः=ஜனங்கள் न खलु सन्ति=இருக்கமாட்டார்கள் அல்லவா?

(க - ரை) [ஞானமார்க்கம் கர்மமார்க்கம் இவைகளின் மூலம் நற்கதி பெறுவது தனக்கு எவ்வளவு அஸாத்தியமென்று விவரித்துவிட்டு இப்போது பக்தி மார்க்கத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்கிறார்.]

பக்தி என்பது ஈச்வரி விஷயத்தில் வைக்கப்படும் ப்ரீதி என்று சொல்லுகிறார்கள். ஈச்வரி ஸர்வஜீவர்களுக்குள் அந்தர்யாமியானபடியால் பக்தி என்பது, தன்னிடத்திலேயே வைக்கப்பட்ட ப்ரீதி என்று ஏற்படுகிறது. தன்னை நேசிக்காதவர்கள் உலகத்தில் யாருமில்லையாதலால் இந்தவிதமான பக்தி இல்லாதவர்கள் கிடையாது. ஆகையால் இது பிரயோஜனமற்றது.

(ஹேதுக்களில், கேவலாந்வயி, கேவலவ்யதிரேகி முதலியவைகளைத் தர்க்க நூல்களில் காண்க.)

22. What is Bhakti? If it is defined as a species of Love it is clearly futile, because there can be none who does not have it. Who does not love YOU in himself for YOU pervade all beings. In all the three worlds are there any who hate themselves?

आत्मा समस्तजगतां भवतीति सम्य-
ग्विज्ञाय यद्वितनुते त्वयि भावबन्धम् ।
सा भक्तिरित्यभिमतं यदि सिद्धमिष्टं
व्यर्थं विशेष्यमलमस्तु विशेषणं नः ॥ २३ ॥

ஆத்மா ஸமஸ்தஜகதாம் ஹவதீதி ஸம்யக்
விஜ்ஞாய யத்விதநுதே த்வயி ஹாவபந்தம் ।
ஸா ஹக்திரித்யஹிமதம் யதி ஸித்தமிஷ்டம்
வ்யர்த்தம் விசேஷ்யமலமஸ்து விசேஷணம் ந: ॥ உங ॥

भवती = நீ समस्तजगताम् = எல்லா உலகத்திற்கும் आत्मा = ஆத்மா इति = என்பதை सम्यक् = நன்கு विज्ञाय = அறிந்து त्वयि = உன்னிடம் भावबन्धम् = பிரீதியை यत् वितनुते = செய்வது என்பது எதுவோ सा भक्तिः = அதுவே பக்தி इति = என்று यदि अभिमतम् = அபிப்பிராயமானல் इष्टं सिद्धम् = விரும்பியது கைகூடிவிட்டது. विशेष्यम् = விசேஷ்யம் (பக்தி என்ற சிறப்புப் பெயர்) व्यर्थम् = வீணே. नः = நமக்கு विशेषणम् = விசேஷணம் (ஞானம் என்ற) பொதுப் பெயரே अलम् अस्तु = போதும்.

(க - ரை) ஜகத்தில் பிரகாசிக்கும் எல்லா ஜீவாத்மாக்களும் உன்னைத்தவிர வேறில்லை என்ற ஞானம் ஏற்பட்டு உன்னிடம் ப்ரீதி வைப்பதே பக்தி என்று சொன்னல் அப்போது அந்த ஞானமே முக்திக்குக் காரணமாகலாமே. பக்தி என்பது அவசியமில்லையே.

23. If Bhakti is defined as that love which is borne for you with the clear knowledge that you are the real soul of all beings, then, it is alright; but in that case we shall be content with the qualifier (knowledge) and can dispense with the qualified (Bhakti.)

स्वात्मेतरत्वमवधार्य परत्वबुद्ध्या
यत् प्रीयते गुरुजनेष्विव सैव भक्तिः ।
स्यादेतदेवमियमेव तु मे जिहास्या
द्वैतभ्रमात् किमधिकं भवबन्धमूलम् ॥ २४ ॥

ஸ்வாத்மேதரத்வமவதார்ய பரத்வபுத்த்யா
யத் ப்ரீயதே குருஜநேஷ்விவ ஸைவ பக்தி: ।
ஸ்யாதேததேவமியமேவ து மே ஜிஹாஸ்யா
த்வைதப்ரமாத் கிமதிகம் பவபந்தமூலம் ॥ உச ॥

स्वात्मेतरत्वम्= தன்னைக்காட்டிலும் வேறு என்று अवधार्य= தெரிந்துகொண்டு परत्वबुद्ध्या=ஜீவகோடிகளைக்காட்டிலும் மேல் என்ற பாவத்துடன் गुरुजनेषु इव=பெரியோர்களிடம் வைப்பதுபோல यत् प्रीयते=பிரீதி வைக்கப்படுதல் सैव भक्तिः= என்ற அதுவே பக்தி एतत् एवं स्यात्=என்று இது இவ்விதமானால் इयम् एव तु=இதுவே யன்றோ मे=எனக்கு जिहास्या= விடத்தகுந்தது. द्वैतभ्रमात् अधिकम्=இரண்டும் வேறு என்ற பிரமத்தைக்காட்டிலும் வேறான भवबन्धमूलम्=பிறவிவிலங்குக்குக் காரணம் किम्=எது ?

(க - ரை) ஈச்வரன் தன்னைக்காட்டிலும் வேறு. அவன் உயர்ந்தவன். நாம் தாழ்ந்தவர்கள் என்று அறிந்து கொண்டு ஆசார்யன் பிதா முதலியவர்களிடம் ப்ரீதி வைப்பதுபோல் ஈச்வரனிடம் ப்ரீதி வைப்பது பக்தி என்று

சொன்னல் இது நம் கொள்கைக்கு முற்றிலும் விரோதமானது. ஈச்வரன் வேறு நாம் வேறு என்ற "த்வைத" புத்தி பிறவித் தீவினைகளுக்கு அடிப்படையான காரணம் அன்றோ.

24. If that loving regard which we have towards YOU as we bear towards our venerable elders be called Bhakti, that indeed may be Bhakti, but for me, it is exactly the thing to guard against for what is more surely the cause of the shackles of "Saṁsāra" than the ill-advised cognition of two foldness.

सेवैव भक्तिरिति कर्मपथप्रवेशः
सेव्यप्रसादफलका किल कर्मसेवा ।
ध्यानप्रवाह इति चेच्छ्रवणात्तृतीयः
प्रागेव मातरयमाकलितोऽभ्युपायः ॥ २५ ॥

ஸேவைவ பக்திரிதி கர்மபதப்ரவேஶ:
ஸேவ்யப்ரஸாதஃபலகா கில கர்மஸேவா ।
த்யானப்ரவாஹ இதி சேச்ச்ரவணாத் த்ருதீய:
ப்ராகேவ மாதரயமாகலிதோऽப்யுபாய: ॥ ௨௫ ॥

सेवा एव=பணிவிடை செய்வதே भक्तिः=பக்தி इति=என்றால் कर्मपथप्रवेशः=கர்மமார்க்கத்தில் நுழைந்ததாகும். कर्मसेवा=கர்மத்தை அனுஷ்டித்தல் सेव्यप्रसादफलका किल=(கர்மானுஷ்டானத்திற்குப் பலன்) யாரை ஸேவிக்கிறோமோ அவர்களுடைய மனமலர்ச்சியைப் பயனாகக் கொண்டதல்லவா? मातः=தாயே ध्यानप्रवाहः=இடைவிடாத தியானமே பக்தி इति चेत्=என்றால் श्रवणात् तृतीयः=ச்ரவணம் கீர்த்தனம் என்ற இரண்டிற்குப் பிறகு மூன்றாவதாக

प्रागेव=முன்னமேயே अयम्=இந்த अभ्युपाय:=உபாயம் आकलित:=அறியப்பட்டது.

(க - ரை) ஈச்வரனைப் பூஜை முதலிய கர்மாக்களால் ஸேவிப்பது பக்தி என்றால் இது கர்மமார்க்கத்தையனுசரிப்பதாகும். வேலைக்குக் கூலி எஜமான் இஷ்டப்பட்டல்லவா கொடுக்கவேண்டும். தியானம் செய்வது பக்தி என்றாலோ இது ஞானமார்க்கத்தில் உட்புகுந்ததாகிவிட்டது, அங்கு இது ச்ரவணம், மனனம், நிதித்யாஸனம என்று மூன்றுவது ஸாதனமாகக் கூறப்பட்டுள்ளது. ஆகையால் இதற்கு பக்தி என்று புதுப்பெயர் வழங்கவேண்டியதில்லை.

25. If service be called Bhakti, it involves a direct entry into the path of action and it is well known that the servant is requited by the Master's being pleased with him. If Bhakti is contemplation, it is a method with which we are already familiar as it is the third in order from "Śravaṇa" (in the practice of JÑĀNA.)

अत्रैव दास्यसि विमुक्तिमथापि याचे
मातः शरीरपतनं मणिकर्णिकायाम् ।
अस्तु स्वकृत्यमनुकम्पनमीश्वराणां
दासस्य कर्मकरतैव तथा स्वकृत्यम् ॥ २६ ॥

அத்ரைவ தா³ஸ்யஸி விமுக்திமதா²பி யாசே
மாத: ஶரீரபதனம் மணிகர்ணிகாயாம் ।
அஸ்து ஸ்வக்ருத்யமநுகம்பநமீஶ்வராணாம்
தா³ஸஸ்ய கர்மகரதைவ ததா² ஸ்வக்ருத்யம் ॥ உசு ॥

मात:=அம்மா! अत्रैव=இங்கேயே विमुक्तिम्=மோக்ஷத்தை दास्यसि கொடுப்பாய் अथापि=ஆனாலும் मणिकर्णिकायाम्=மணி

கர்ணிகையில் शरीरपतनम्=சரீரம் விழவேண்டும் என்று याचे=யாசிக்கிறேன். अनुकम्पनम्=தயை புரிதல் ईश्वराणां= பிரபுக்களுக்கு स्वकृत्यम्=தான் செய்யவேண்டிய கார்யம் अस्तु=(என்பது) இருக்கட்டும். तथा=அப்படியே दासस्य= அடிமைக்கு कर्मकरतैव=தன் வேலையைச் செய்வதே स्वकृत्यम्= தன் கடமையாகும்.

(க - ரை) தாயே! உன்னை ஆச்ரயித்தவனான எனக்கு நீ தயையினால் நான் இருக்குமிடத்திலேயே முக்தியைக் கொடுத்தாலும் கொடுத்துவிடுவாய். ஆனால் எனக்கு முக்தியடைய மணிகர்ணிகைக்குப் போய்ச் சரீரத்தை விடவேண்டுமென்று எண்ணமிருக்கிறது. பிரபு இரங்கி ஸேவகனுக்கு வேலையில்லாமல் கூலி கொடுத்தாலும் ஸேவகன் வேலையைச் செய்தே கூலியை வாங்க விரும்புகிறான். ஆதலால் முக்தி பெறுவதற்குரிய காசி யாத்திரை என்ற வேலையை நான் செய்தே முக்திபெற விரும்புகிறேன்.

26. Mother, you will, I am sure, grant me salvation at this very spot. Yet it is my wish that I should breathe my last at Maṇikarṇikā (a holy ghat in Benares). For, even as vouchsafing pity beeomes masters, doing duty becomes servants.

(A salvation-seeker is enjoined to spend his last days at Kāśī.)

सद्यो भवेत् सुकृतिनामुपदेशलाभः
पापात्मनां बहुतिथे समये व्यतीते ।
इत्यादिभिः किल पुराणवचोभिरम्ब
वाराणसीमपि न याचितुमुत्सुकोऽस्मि ॥ २७ ॥

ஸத்யோ ஹவேத் ஸுக்ருதிநாமுபதேசலாப:
பாபாத்மநாம் வஹுதிதே ஸமயே வ்யதீதே ।
இத்யாதிபி: கில புராணவசோபிரம்ப
வாராணஸீமபி ந யாசிதுமுத்ஸுகோऽஸ்மி ॥ உஎ ॥

अम्ब = தாயே ! सुकृतिनाम् = புண்ணியம் செய்தவர்களுக்கு उपदेशलाभः = உபதேசம் கிடைப்பது सद्यः भवेत् = உடனே ஏற்படும். पापात्मनां = பாபிகளுக்கு बहुतिथे समये व्यतीते = வெகு நாள் கழிந்தபின்னர் (भवेत् = ஏற்படும்) इत्यादिभिः = முதலிய पुराणवचोभिः किल = புராண வசனங்களினால் அல்லவா वाराणसीम् अपि = காசியைக்கூட याचितुम् = யாசிப்பதற்கு उत्सुकः नास्मि = நான் ஆவல் கொள்ளவில்லை.

(க - ரை) ஆனால் அந்த ஆசையும், நான் வைப்பது தகாது. ஏனெனில் புண்ணியாத்மாக்களுக்குத்தான், காசியில், சீக்கிரம் முக்தியென்றும், என்போன்ற பாபிகளுக்கு அங்குச் சென்றும் தாமதப்படுமென்றும் புராணங்கள் மூலமாய்த் தெரிகிறது. ஆகையால் காசிக்குப் போக வேண்டுமென்ற ஆசையையும் நான் விட்டுவிட்டேன்.

27. But the Purāṇas declare that only men with a creditable record of actions receive the blissful communication (from God Viśveśvara) promptly, while men with tainted souls have to wait very long. When I consider this, I am not very eager to covet even Vārāṇasī.

आक्रान्तमन्तररिभिर्मदमत्सराद्यै-
र्गात्रं वलीपलितरोगशतानुविद्धम् ।
दारैः सुतैश्च गृहमावृतमुत्तमर्णै-
र्मातः कथं भवतु मे मनसः प्रसादः ॥ २८ ॥

ஆக்ராந்தமந்தரரிபிர்மதமத்ஸராத்யை:
மாத்ரம் வலீபலிதரோகஶதாநுவித்தம் ।
உத்தமர்ணை:
மாத: கதம் பவது மே மநஸ: ப்ரஸாத: ॥ உஅ ॥

अन्त: = ஹ்ருதயம், मदमत्सराद्यैः = அஹம்பாவம், த்வேஷம் முதலிய अरिभिः = சத்ருக்களால் आक्रान्तम् = சூழப்பட்டிருக்கிறது. गात्रम् = சரீரம், वली = தோல் சுருக்கம் पलित = நிரை रोगशतानुविद्धम् = நூற்றுக்கணக்கான பல ரோகங்கள் இவைகளோடு கூடியதாகிவிட்டது. उत्तमर्णैः = கடன் கொடுத்தவர்கள் போன்ற दारैः सुतैः च = பெண்டாட்டிபிள்ளைகளால் गृहम् = வீடு आवृतम् = சூழப்பட்டிருக்கிறது. मातः = அம்மா! मनसः प्रसादः = சித்தத்திற்கு தெளிவு मे कथं भवतु = எனக்கு எப்படி உண்டாகும்?

(க - ரை) ஹ்ருதயம், அகம்பாவம், அஸூயை முதலிய விரோதிகளால் சூழப்பட்டிருக்கிறது. சரீரமோ தோல் சுருக்கம், நிரை, பற்பலரோகங்கள் இவைகளால் பீடிக்கப்படுகிறது. கடன்கொடுத்தவர்களைப் போல், அதிகாரம் செய்யும் பெண்டாட்டி பிள்ளைகளால் வீடு ஆக்ரமிக்கப்பட்டது. என் தாயே! என் மனம் எப்படிக் குழம்பாமல் தெளிவுடனிருக்க முடியும்?

குறிப்பு: இது முதல் கவி ஈச்வரியின் பாதங்களில் சரணகதியே தனக்கு கதி என்று தெரிவிக்கிறார்.

28. My inner being is overpowered by the inimical passions like pride and jealousy. My body is a prey to a hundred ills in addition to its being shrivelled and the hairs having grown grey. My wife, and sons with creditorlike airs have taken possession of the house. Mother, how can I ever have peace of mind.

धन्याः कति त्रिभुवने परमोपभोग्यं
संसारमेव परमेश्वरि भावयन्तः ।
आभासरूपमवबोधमिमं समेत्य
क्लिश्ये कियत् कियदहं त्वमुना भवेन ॥ २९ ॥

யந்யா: கதி த்ரிபுவநே பரமோபபோக்யம்
ஸம்ஸாரமேவ பரமேஶ்வரி பாவயந்த: ।
ஆபாஸரூபமவபோதமிமம் ஸமேத்ய
க்லிஶ்யே கியத் கியதஹம் த்வமுநா பவேந ॥ உக ॥

परमेश्वरि=பரமேச்வரி! संसारमेव=பிறவியையே परमोपभोग्यम्=மிகவும் அநுபவிக்கத்தகுந்ததாக भावयन्तः=பாராட்டுகிறவர்கள் त्रिभुवने=மூவுலகிலும் कति धन्याः=எத்தனை பாக்கியசாலிகள் இருக்கிறார்கள். इमम्=இந்த आभासरूपम्=அரைகுறையான अवबोधम्=ஞானத்தை समेत्य=அடைந்து अमुना भवेन=இந்தப் பிறவியினால் अहं तु=நானோ कियत् कियत्=எந்த எந்த்விதமாக क्लिश्ये=துன்புறுகிறேன்.

(க் - ரை) லோகத்தில் எவ்வளவு ஜனங்கள் இந்த ஜீவலோக வாழ்க்கையையே பெருமையுடன் போற்றுபவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு மனமகிழ்ச்சிக்கும் திருப்திக்கும் ஒன்றும் குறைவில்லை. எனக்கோவென்றால் அரை குறையான ஒரு ஞானம் ஏற்பட்டதனால் இவ்வாழ்க்கையில் நான் மிக்க துயரமடைகின்றேன்.

29. Are there not many men in the world who are blessed in their partiality to "Saṁsāra" for its being most highly enjoyable? Oh consort of the highest Lord! Alas, how much do I suffer by the same "Saṁsāra" on account of my having caught a clouded vision of true knowledge.

का संसृतिः किमपचारनिबन्धनेयं
कीदृग्विधस्य तव किं क्षतमेतयेति ।
प्रश्ने तु नास्मि कुशलः प्रतिवक्तुमेव
खेदस्तु मे जननि कोऽप्ययमेवमास्ते ॥ ३० ॥

கா ஸம்ஸ்ருதி: கிமபசாரநிபந்தநேயம்
கீத்ருக்விதஸ்ய தவ கிம் க்ஷதமேதயேதி ।
ப்ரச்நே து நாஸ்மி குசல: ப்ரதிவக்துமேவ
கேதஸ்து மே ஜநநி கோऽப்யயமேவமாஸ்தே ॥ ௩௰ ॥

का संसृतिः=பிறவி என்றது என்ன? इयम्=இது किमपचारनिबन्धना=என்ன பாபத்தினால் உண்டானது? कीदृग्विधस्य तव=எந்தமாதிரியான உனக்கு एतया=இதனால் किं क्षतम्=என்ன கெடுதல் நேர்ந்துவிட்டது? इति प्रश्ने तु=என்ற கேள்வி ஏற்பட்டால் प्रतिवक्तुम्=பதில் உரைக்க कुशलः=ஸாமர்த்தியமுள்ளவனாக नास्मि एव=நான் இல்லவே இல்லை. जननि=தாயே! मे=எனக்கு एवम्=இந்தமாதிரியான कोऽप्ययम्=ஏதோ ஒரு खेदः तु=வேதனைமட்டும் आस्ते=இருக்கிறது.

(க - ரை) "ஸம்ஸாரம்" என்பது என்ன? அது எந்தத் தீவினையின் பயனாக வந்தது? உன் ஸ்வரூபம் என்ன? இந்த "ஸம்ஸாரத்தால்" உனக்கு என்ன தீங்கு விளைந்தது? என்றவாறு கேள்விகள் கேட்டால் எனக்கு ஒன்றும் பதில் சொல்ல முடியாது. எனக்குத் தெரிந்த தென்னவென்றால் ஏதோ ஒரு விதமான துன்பத்தை இதனால் என் மனம் அடைகின்றது என்பதுதான்.

30. I am not competent to make any answer to the questions " What is Saṁsāra? By what failings was it brought about? What harm has it done you? What

kind of person you are" etc. But, My Mother, an indescribable gloom does in this manner overcome me.

एवं गतस्य मम सांप्रतमेतदर्ह-
मत्रेदमौपयिकमित्थमिदं च साध्यम् ।
अस्मिन् प्रमाणमिदमित्यपि बोद्धुमम्ब
शक्तिर्न मे भुवनसाक्षिणि किं करोमि ॥ ३१ ॥

ஏவம் கதஸ்ய மம ஸாம்ப்ரதமேதஹர்ஹ-
மத்ரேதமௌபயிகமித்தமிதம் ச ஸாத்யம் ।
அஸ்மின் ப்ரமாணமிதமித்யபி போத்துமம்ப
சக்திர்ந மே புவநஸாக்ஷிணி கிம் கரோமி ॥ ௩௧ ॥

भुवनसाक्षिणि=உலகத்திற்கு சாக்ஷியான अम्ब=தாயே! एवं गतस्य मम=இவ்விதம் இருக்கும் எனக்கு, सांप्रतम्=இப்பொழுது एतत् अर्हम्=இது தகுந்தது. इदम् अत्र=இது இங்கு औपयिकम्=உபாயமாகக்கூடியது. इदम् इत्थम=அது இவ்விதமாக साध्यम्=ஸாதிக்கத்தகுந்தது. इदम् अस्मिन्=இது இந்த விஷயத்தில் प्रमाणम=ஆதாரமானது. इत्यपि=என்று கூட बोद्धुम्=அறிய न मे शक्तिः=எனக்கு சக்தி இல்லை. किं करोमि=என்ன செய்வேன்?

(க - ரை) இப்படி துக்கித்துக்கொண்டிருக்கும் எனக்கு இந்த துக்கத்தைப் போக்கிக்கொள்ள உபாயம் ஒன்றும் தெரியவில்லை.

குறிப்பு:— இந்த சுலோகத்தில் சரணாகதிக்கு அங்கமான தன் "கார்ப்பண்ய"த்தைத் தெரிவிக்கிறார்.

31. In this predicament, Oh Mother, the eternal witness of all the world, it is impossible for me to

determine what is fit for me to do, what the means, what the goal and by what rule to proceed.

न ज्ञायते मम हितं नितरामुपायो
दीनोऽस्मि देवि समयाचरणाक्षमोऽस्मि ।
तत्त्वामनन्यशरणः शरणं प्रपद्ये
मीनाक्षि विश्वजननीं जननीं ममैव ॥ ३२ ॥

ந ஜ்ஞாயதே மம ஹிதம் நிதராமுபாயோ
தீனோऽஸ்மி தேவி ஸமயாசரணாக்ஷமோऽஸ்மி ।
தத்த்வாமநந்யஶரண: ஶரணம் ப்ரபத்யே
மீனாக்ஷி விஶ்வஜநநீம் ஜநநீம் மமைவ ॥ ௩௨ ॥

मम हितम्=எனக்கு ஹிதம் न ज्ञायते=தெரியாது. उपाय: नितराम्=உபாயம் கொஞ்சம்கூட (தெரியாது). देवि=தேவி! दीनोऽस्मि=எளியவனாக இருக்கின்றேன். समयाचरणाक्षमोऽस्मि=விதிகளை ஆசரிப்பதிலும் அசக்தனுயிருக்கிறேன். तत्=ஆகையால் मीनाक्षि=மீனாக்ஷி! अनन्यशरण:=வேறு கதியற்ற நான் त्वां विश्वजननीम्, ममैव जननीं शरणं प्रपद्ये=லோகமாதாவும் எனக்கு அன்னையாயும் உள்ள உன்னை சரணம் அடைகின்றேன்.

(க - ரை) என் நன்மை எனக்கே தெரியாது. அதற்கு உபாயமும் தெரியாது. நான் எளியவன். சாஸ்திர விதிகளை அனுஷ்டிக்கவும் சக்தியற்றவன். எனக்கு வேறு கதியில்லை. ஹே மீனாக்ஷி, லோகமாதாவே, இந்த நிலைமையில் உன்னைச் சரணமடைகின்றேன்.

குறிப்பு:—இந்த சுலோகத்தில் கவி அம்பாளிடம் தன் சரணாகதியைத் தெரிவித்துக்கொள்ளுகிறார்.

32. I do not know what is good for me—why speak of my ignorance of methods. I am wretched

and hopelessly incapable of adherence to the rules. I therefore, Oh Mīnākṣi, helpless in very direction, seek refuge with you, the Mother of the Universe, and more especially my own mother.

किञ्चिन्मया श्रुतिषु किञ्चिदिवागमेषु
शास्त्रेषु किञ्चिदुपदेशपथेषु किञ्चित् ।
आघ्रातमस्ति यदतो भवतीं वरीतुं
गोप्त्रीति काचिदुदपद्यत बुद्धिरेषा ॥ ३३ ॥

கிஞ்சின்மயா ஶ்ருதிஷு கிஞ்சிதிவாகமேஷு
ஶாஸ்த்ரேஷு கிஞ்சிதுபதேஶபதேஷு கிஞ்சித் ।
ஆக்ராதமஸ்தி யததோ பவதீம் வரீதும்
கோப்த்ரீதி காசிதுதபத்யத புத்திரேஷா ॥ ௩௩ ॥

मया=என்னால் श्रुतिषु किञ्चित्=வேதங்களில் சில பாகமும் आगमेषु किञ्चिदिव=சைவ ஆகமங்களில் சிறிது பாகமும் शास्त्रेषु किञ्चित्=சாஸ்திரங்களில் கொஞ்சமும் उपदेशपथेषु=உபதேச வழிகளில் சிறிதளவும் यत् आघ्रातमस्ति=முகர்ந்து பார்க்கப்பட்டிருக்கிறது. अतः=ஆனபடியால் भवतीम्=உன்னை गोप्त्री इति=ரக்ஷிப்பவள் என்று वरीतुम्=வரிக்க एषा काचित् बुद्धिः=இந்த ஒரு புத்தி उदपद्यत=ஏற்பட்டது.

(க - ரை) நான் சிறிது சிறிது வேதம், ஆகமம், சாஸ்திரம், மந்திர சாஸ்திரம் இவைகளில் கற்றுணர்ந்ததன் பயனாக நீ ரக்ஷிப்பாய் என்றும் உன்னைச் சரணமடைய வேண்டுமென்றும் தெரிந்துகொண்டேன். (இதுவே எனக்குப் பரம லாபம்.)

குறிப்பு:—"கோப்த்ருத்வவரணம்" என்பது சரணாகதியின் மற்றோர் அங்கம் இதனால் விளக்கப்படுகிறது.

33. A little of the Vedas, a little of Śaiva Literarature, a little of the Śāstras and a little of the Mantras handed down by the process of initiation alone, I have had opportunity to learn and even that I have learnt only superficially. But it is this that has induced the determination in me that I must seek you as my protectress.

ब्रह्मैवमेवमहमेष तदाप्त्युपाय
इत्यागमार्थविधुराः प्रथमे दयार्हाः ।
त्वद्रक्षकत्वगुणमात्रविदो द्वितीया
इत्यर्थये सदधिकारनिरूपणाय ॥ ३४ ॥

ப்ரஹ்மைவமேவமஹமேஷ ததாப்த்யுபாய
இத்யாகமார்த்தவிதுரா: ப்ரதமே தயார்ஹா: ।
த்வத்ரக்ஷகத்வகுணமாத்ரவிதோ த்விதீயா
இத்யர்த்தயே ஸததிகாரநிரூபணாய ॥ ௩௪ ॥

ब्रह्म एवम्=பிரம்மம் இப்படி अहम् एवम्=நான் இப்படி तदाप्त्युपायः=அதை அடையும் உபாயம் एषः=இது इति=என்று आगमार्थविधुराः=சாஸ்திரார்த்தம் தெரியாதவர்கள் प्रथमे दयार्हाः=முதலில் தயைக்குப் பாத்திரமாக வேண்டியவர்கள் त्वद्रक्षकत्वगुणमात्रविदः=நீ ரக்ஷிக்கும் சுபாவமுடையவள் என்பதைமட்டும் அறிந்தவர்கள் द्वितीया इति=இரண்டாவது என்று (இவ்வாறு) सदधिकारनिरूपणाय=உன் தயையைப் பெறத் தகுதி முறைமையைக் கவனிக்கும்படி अर्थये=வேண்டிக்கொள்கிறேன்.

(க - ரை) ப்ரம்மம் என்றும் தான் என்றும் பிரம்மத்தை அறிய உபாயமென்றும் ஒருவிதமான ஞானமும்

அற்றவர்கள் "கார்பண்ய" விஷயத்தில் என்னைவிட மேலானவர்கள். நான் உன்னை 'ரக்ஷகி'யாக அறிந்திருக்கிறேன். ஆகையால் அடுத்தபடியில் என்னை 'க்ருபண'னாக அங்கீகரித்து அனுக்ரஹிப்பாயாக!

குறிப்பு:—எவ்வளவுக்கெவ்வளவு அறியாமை அதிகமோ அவ்வளவுக்கவ்வளவு "கார்பண்யம்" உடையவனாயிருப்பதில் சிறப்பு என்பது கருத்து.

34. I pray that you will agree to grade eligibility to receive your compassion in the following manner:—those who are thoroughly ignorant of what the Vedas say on Brahman and Jīva and the means of the latter attaining the former, shall be placed first; and those who have just learnt (like me) that it is your nature to relieve the distressed, shall come next.

मातः करोषि ममतां मयि यावदीषत्
तावद्यते मम ततः किमिवास्ति साध्यम् ।
मामित्थमित्थमुपयुङ्क्ष्व न विस्मरेति
किं स्वामिनं त्वरयते क्वचन स्वभृत्यः ॥ ३५ ॥

மாத: கரோஷி மமதாம் மயி யாவதீஷத்
தாவத்யதே மம தத: கிமிவாஸ்தி ஸாத்யம் ।
மாமித்தமித்தமுபயுங்க்ஷ்வ ந விஸ்மரேதி
கிம் ஸ்வாமிநம் த்வரயதே க்வசந ஸ்வப்ருத்ய: ॥ ௩௫ ॥

मातः=அம்மா! मयि=என்னிடத்தில் ईषत् ममताम्=கொஞ்சம் அபிமானத்தை यावत् करोषि=எவ்வளவில் செய்வாயோ, तावत् यते=அவ்வளவு வரை முயலுவேன். ततः किमिव मम साध्यमस्ति=அதற்குமேல் நான் செய்யவேண்

டியது என்ன இருக்கிறது? स्वामिनम्=எஜமானனை स्वभृत्यः= அவன் ஊழியன் माम् इत्थम् इत्थम् उपयुङ्क्ष्व=என்னை இன்ன இன்ன விதமாக உபயோகப்படுத்திக்கொள் न विस्मर इति= மறக்காதே என்று कचन=எங்கேயாவது किं त्वरयते=துரிதப் படுத்துவதுண்டா?

(க-ரை) என் பிரயத்னம் எதுவரையில் என்றால் "இவன் என்னை ஆச்ரயித்தவன்" என்று உனக்கு என்னிடம் அபிமானம் உண்டாகும் வரையில்தான். அதற்கு மேல் எனக்குச் செயல் இல்லை. வேலைக்காரனை ஏற்றுக் கொண்டபிறகு பிரபுவல்லவா் அவனை எவ்விதமாக உபயோகித்துக்கொள்வது என்பதைச் சிந்திக்கவேண்டும்.

35. Mother, I shall exert myself just to such an extent as would suffice to induce you to regard me as your own. More than that, I need not trouble myself about. Does any servant constantly remind his master that the latter should not forget to utilise his services in this or that manner?

त्याज्यं त्यजानि विहितं च समाचराणि
